JULY. 1914. உ Reg. No. M. 1080.

சிவமயம்.

தமிழன்.

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

TAMILIAN.

A Monthly Tamil Journal.

Pandit, S. Muthuswami Pillai, Managing Editor.

Vol. II. | 1089 ஆனி. | No. 10.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	மாணிக்கவாசகரின் சரித்திரம்	289
2.	நாமுட்கொள்ளுமாகாரம்	297
3.	ஆத்மஞ்ஞானம்	299
4.	ஓர் இராணியின் சாபம்	302
5.	சொல்வது வேறு செல்வது வேறு ...	303
6.	யாக்கையின் பயன் ...	306
7.	சக்ரவர்த்தி திருநாள் வாழ்த்து ...	310
8.	மனதின் தன்மை	311
9.	ஒரு மகமதிய பீ. ஏ.	314
10.	மதிப்புரைகள்	316
11.	சமாசாரத்திரட்டு	317

Printed at the 'BHASKARA' PRESS, and
Published by S. Muthuswami Pillai, Trivandrum.

ரோஜா.

சீருலாவிய செந்தமிழ் பரவும் இப்பரதகண்டத்தில் வசிக்கும் புத்திர புத்திரிகளின் மனதைச் சீர் திருத்தவும் புருஷனுக்கும் மனைவிக்கு மிருக்கவேண்டிய மனோரம்மியத்தை அவர்கள் மனதில் புகட்டவும் இப்புத்தகம் இன்றியமையாதது.

இதில் விளங்குவதெல்லாம் படிப்பவர் நாவிற்கு நயமும், கேட்பவர் காதிற்கு இன்பமும், மனதிற்கு உற்சாகமும் தருவதுடன் அறிவை விருத்தியாக்கி மாதர்கட்கு ஊழ்வினைசம்பந்தமே முதற்காரணமாயிருந்து சுகதுக்கமுண்டாகுமென்பதுணராமல் துக்கமுண்டாகுங்காலை கடவுளை துஷித்து வீணிற் பழிசுமப்ப கடாத வழுவெனக் கற்றுணர்ந்த கவிஞர்கள் புகலும் நீதி சாஸ்திர மனைத்தும் இன்னும் அநேக இன்றியமையா விஷயங்களையும் சேர்த்துக் கடிதங்களாக அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அணா 8. தபாற்கூலி பிரத்தியேகம்

ஆநந்த மகிளா.

இப்புள்தகம் அநேக படங்களடங்கியது.

விலை தபால் சார்ஜ் உள்பட ரூபாய் 1. 0.

இது மானிட உயிரைக்காக்கும் கைவல்ய நவநீதமெனும் சஞ்சீவியேயாகும். ஹிந்து ஸ்திரீ புருஷர்களுக்கு பிரியத்தையும் சந்தோஷத்தையுங் கொடுக்கத்தக்கது. ஸ்திரீ புருஷ சம்பந்தமான சாஸ்திரங்களையும் சரீர கோட்பாட்டையும் பூர்வத்தில் ஆரியர்கள் அனுஷ்டித்து வந்த முறையை இப்புஸ்தகம் விவரித்துச் சொல்வதோடு கூட ஆண் பெண் இவ்விரண்டு ஜாதியும் ஒருவரையொருவர் தமதுஇஷ்டப்பிரகாரம் சந்தோஷ சல்லாபஞ் செய்துகொள்ளும் விதத்தையுந் தெளிவாய் எடுத்துரைபப்து. மூன்று புஸ்தகங்களுக்கு ஒரு புஸ்தகம் இனாம்

P. S. Roy
PONDICHERRY.

தமிழன் சந்தாவிவரம்.

	ரூ	அ	பை.
போஷகர்களுக்கு	4	0	0
சந்தாதார்க்கு	2	0	
பினாங்கு சிங்கப்பூர்முதலிய வெளிநாடுகளுக்கு	3	0	,,

குறிப்பு, (1)முதல் ஆறு மாதங்களுக்குள் ஒரு வருஷ சந்தா முன்னதாகச்செலுத்தும் சந்தாதார்க்கும் போஷகர்களுக்கும் 8 அணா விலையுள்ள "கற்பகவல்லி" என்னும் நாவல் ஒரு பிரதி இனாமாகக்கொடுக்கப்படும்.

Pandit S. Muthuswami Pillai. Managing Editor.
The "TAMILIAN" Trivandrum

உ

சிவமயம்.

தமிழன்.

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

"தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்; மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு"—குறள்.

பண்டிதர் S. முத்துசுவாமிப்பிள்ளை—பத்திராதிபர்.

தொகுதி II } 1089. ஆனி மீ. { பகுதி X

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரவிளக்கம்.

(238–வது பக்கத் தொடர்ச்சி).

ஸ்ரீமாந் N. சுந்தரமய்யரவர்கள்.

மேலும், தனியடியார்களையே தொடர்ச்சியாகக் கூறிவரும் சுந்தரர், தொடர்ச்சி மத்தியில் அடியார் கூட்டத்தோடு ஒப்புமைக் கேலாத சங்கப்புலவர்களைக் கூறினாரென்றல் எவ்விதம் பொருந்தும். ஏழாவது பாடலுக்கு முன்னும் பின்னுமுள்ள பாடல்களில் இந்த ஒருபதத்தைத் தவிர மற்றைப் பதங்களெல்லாம் தனியடியாரையே வெளிப்படையாகக் குறித்து நின்றன. ஆகவே 'பொய்யடிமையில்லாத புலவர்' என்பதும் தனிப்பெயராம். அதுவும் மாணிக்கவாசகரையே குறித்து நின்றது எனக்கூறுவதும் உண்மைச் சார்புடைத்தேயாம்.

ஆயின், 'தில்லைவாழந்தணர்த மடியார்க்கு மடியேன்' எனப் பொதுப் பெயரால் தொடங்கி விட்டுப் பின்னர் தனியடியார்களைக் கூறியது என்னையோவெனின் கூறுதும்.

'தில்லைவாழந்தணர்' என்னும் பதம் இறைவனருளால் தொடங்கப்பட்ட பதம். மேலும் இப்பாடல், தில்லையி லருளப்பட்டமையால், தில்லை ஈசன் அருள் பெற்று அவ்வூரில் பிறக்கப் பாக்கியம்

பெற்ற அந்தணர், ஒவ்வொருவரும் மெய்யடியார்களேயாமெனக் கூறுவார், அவரை முதலில் கூறினர். அங்ஙனம் கருதும் வழி அவர் ஒவ்வொருவரும் தனியடியாரேயாவர்.

மேலும், பொய்யடிமையில்லாத புலவரென்பதற்கு சங்கப்புலவரெனப் பொருள் வருத்தியதுமன்றி, கடைச்சங்கம் மருவியிருந்த புலவர் எனப் பொருள் வருவித்துக் கூறியதும் எங்ஙனமோவறியேம். அங்ஙனம் நியதி கெட்டு, படித்த வித்துவான்களையெல்லாம் பொதுப்படக் கூறினரென்னில், அவர் பத்தாவது பாடலில் " பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்குமடியேன் " எனப் பலமுறை கூறுவதால் கூறியது கூறினரென்னும் குற்றம் சாட்டப்படுவர். சுந்தரர் தமது திருத்தொண்டத் தொகையில் சந்தேகம் நேராவண்ணம் பட்டப்பெயரால் அழையாது இயற்பெயராலே யழைப்பரென கனம் குருகுஹதாஸ்ப்பிள்ளையவர்கள் கூறுவார்கள்.

ஆயின், திருநாளைப்போவர்; (கழறிற்றறிவார்) பேயர் முதலிய பதங்களெல்லாம் பட்டப்பெயராயமைந்ததுமன்றி, அடியார்களுக்கு முன்உளதாய இயற்பெயர்மாறி நாம் இது சமயம் வழங்கும் பெயரெல்லாமே பின்னர் சூட்டிய பட்டப்பெயரென்றே யெமது துணிபு. கண்ணப்பர், திருக்குறிப்புத்தொண்டர், சண்டி, திருநாவுக்கரசு, ஞானசம்பந்தர், சிறுத்தொண்டர் முதலாய சொற்றொடர்கள் இயற்பெயரல்லவென்பது சொல்லாமலே விளங்கும்.

இதுகாறும் கூறியவற்றால் " பொய்யடிமையில்லாத புலவரென்பது" சங்கப்புலவரெனக் கூறியதால் வரும் இழுக்கும், மாணிக்கவாசகரெனப் பொருள் படுத்துவதுதான் பொருத்த முடைத்தாமென்பதும் ஒரு சிறிது விளக்கபபட்டது.

இனி ஒரு ஆசிரியர் தம்முன்னிருந்தோரைக் கூறாது விட்டதால் அவர் முன்னிருந்தாரல்லர் என நியாயம் ஏற்பட்டுவிடாது. சுந்தரர் தமது திருத்தொண்டத் தொகையில் சைவசிகாமணியாகிய மார்க்கண்டேயரைக் கூறாது விடக்காரணமென்ன. அவ்விதமே, கண்ணப்பருடன் கடவுளைக் கண்டு ஆனந்தித்த சிவகோசிரியரையும் கூறாதுவிட்டாரன்றோ வெனின் கூறுதும்.

மார்க்கண்டேயர் புராண கதையைச் சேர்ந்தவர். அவர் எது காலத்தினர், எது ஊரினர் என உறுதியாயுரைப்பவரின்று. மேலும் அவர் பேர் சுந்தரர் காலத்திலே பிரசித்தமானதும் தவிர அவரைத்

தெய்விகமாகவும் கொண்டாடத் தொடங்கிவிட்டார்கள். இனி கண்ணப்பர் சரித்திரம் கூறுங்கால் சிவகோசிரியார் உண்மைப் பத்தியும் வெளிவருமெனக் கூறுது விட்டாரென்னலாம். ஆனல் நமது சுவாமிகள் அங்ஙனம் புராண கதையைச் சேர்ந்தவருமன்று. சிவகோசிரியரைப்போல் இன்னெருவர் பக்தி காட்டுவதற்குக் காரணபூதராயிருந்தோடு அமைந்தவருமன்று.

'புத்தன் முதலாய புல்லறிவில் பல் சமயம்' நீக்கி, சைவ மதஸ்தாபனம் செய்த மகான்.

"விளங்கிழை பகர்ந்த மெய்யுடை முக்கட்
காரணனுரையெனு மாரண மொழியோ,
ஆதி சீர்பரவும் வாதவூரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத்தேனே
யாதே சிறந்த தென்கு வீராயின்,
வேத மோதின் விழி நீர் பெருக்கி
நெஞ்சு நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்;
திருவாசக மிங்கொரு காலோதிற்
கருங்கன் மனமுங்கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாய
மெய்மயிர் பொடிய விதிர் விதிர்ப் பெய்தி
யன்பா லுருகுனரன்றி
மன்பதையுலகில் மற்றையரிலரே"

எனச் சிவப்பிரகாச சுவாமிகள் கூறியவாறு,

நான்மறையோடு ஒப்பு நோக்கினும் மேம்பட்டு, அவர் வாசகத்தைக் கேட்கும்பொழுது அங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும் நாட்டமுறு மென்னில் அது ஞானடைதல் வியப்பன்றே, யென்ற வாறு அத்துணைச் சிறப்பு வாய்ந்த மாணிக்கவாசக சுவாமிகளை, யெவ்விதம் சுந்தரர் மறப்பர். அவர் மறந்தாரென்றலும் அவருக்கு மேன்மையன்று.

மேலும் கடைச் சங்கப்புலவர் எல்லாரும் சைவரல்லவென்பது திண்ணம். கபிலர், பரணர், நக்கீரர் முதலாயோர் நல்ல சைவரேயாம். அவர் பாடல்கள் பதினென்ருவது திருமுறையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் அவருடன் இருந்த சீத்தலைச் சாத்தனர்

முதலாயினோர் சைவரல்லவென்பது சொல்லாமலே விளங்கும். அக்காலத்து சமயவாதிகள் தம்முள் அவ்வளவு துவேஷமிருந்ததாகத் தெரியவில்லை. மாணிக்கவாசக சுவாமிகள் புத்தரை வாதில் வென்ற சமயத்திலும் கூட அவரைக் காணக்கூடாதென்று திரைபோட்டிருந்ததாகக் கூறுவதும் பின் வந்தோர் சேர்த்த கதை யென்றே யெனது அபிப்பிராயம். இந்த வியாசத்தில் அவர் மலையாள கிறிஸ்துவரை இந்துக்களாக்கின விவரம் கூறப்படுமானதால், அவ்வித உயர்ந்த அபிப்பிராயம் கொண்டவர் புத்தரைக் காண வெறுத்து மறைத்திருந்தாரென்றல் பொருந்தாது.

ஆகவே, நம்பியாண்டார் நம்பி காலத்தில் 63 நாயன்மார்களையும் சிலையாகப் பிரதிஷ்டை செய்திருக்கவேண்டுமாதலால் அவர் பொருள் கொண்டவாறு "பொய்யடிமையில்லாத புலவர்" என்பார் சங்கப் புலவரெனக் கருதி சிலை பிரதிஷ்டிப்பித்தாரென்று கருத இடமுண்டு.

இனி மலை கெல்லி யெலி பிடித்தவாறு போல இந்தத் தர்க்கத்தைக் கிண்டிப்பார்ப்பதில் பலனில்லை. எவ்வித தர்க்கம் செய்யினும் வைதீக சைவர்கள், தங்கள் குருக்கள் கொண்ட பொருளிலிருந்து மாறவும் மாட்டார்கள். நாம் அதை யிட்டுக் கூறுவதால் அவர்களது துர் அபிப்பிராயம் கிடைப்பதுந் தவிர அவ்வித சந்தேக பதங்கொண்டு மாணிக்கவாசக ஸ்வாமிகள் கால நிர்ணயம் செய்தலும் சரியன்று.

எனினும் எனது அறிவிற் கெட்டியமட்டிலும் சுந்தரர் "பொய்யடிமையில்லாத புலவர்" என்னும் பதத்தை மாணிக்கவாசக சுவாமிகளைக் கருதியே உபயோகப் படுத்தியிருக்கின்றாரென்று தோன்றுகிறது. இதை இம்மட்டோடு நிறுத்தி 2-வது சந்தேகத்தை ஒரு சிறிது ஆராய்வோம்.

அதாவது தேவாரம் பாடிய மூவரும் இவரைப்பற்றி யொன்றும் கூறாதிருக்கவும் இவர் அவர்களைப்பற்றி ஓரோவிடத்தில் பிரஸ்தாபித்திருக்கின்றாரல்லவா.

தேவாரம் பாடிய மூவர்களும் இவரைப்பற்றிக் கூறினாரில்லரெனக் கூறுவதும் அறியாதார் கூற்றேயாம். இம்மூவரினும் முதலவராய திருநாவுக்கரசு சுவாமிகள் இவர் பொருட்டு நரியைக் குதிரையாக்கிய திருவிளையாடலைக் குறிப்பிட்டிருக்கின்றது மன்றி, நந்தியே இங்ஙனம்

மாணிக்கவாசக சுவாமிகளாகத் திரு அவதாரம் செய்தாரென்றும் கூறியிருக்கின்றார். அடியில் வரும் பாடல்களால் மேற்கண்ட உண்மையறியலாம்

"நரியைக் குதிரை செய்வானும் நரகரை மீத்தவு செய்வானும்
விரதம் கொண்டாட வல்லானும் விச்சின்றி நாறு செய்வானும்
முரசதிர்ந்தானை முன்னோடை முன்பணிந்தன்பர்களேத்த,
அரவரைச் சார்த்தி நின்றானு மாரூரமர்ந்த வம்மானே"
"குராமலரோடார மதியஞ்சடை மேற் கொண்டார்
குடமுழ நந்தீசனை வாசகனாகக் கொண்டார்"

ஆயின் சிலர் "நரியைக் குதிரை யாக்கியது என்பது ஓர் பழைய கதை. அது பின் வந்தோர் மாணிக்க வாசகருக்காகவென்று சேர்த்துக் கூட்டிவிட்டார்கள். திருநாவுக்கரசு சுவாமிகள் காலத்தில் அது ஓர் கட்டுக் கதையாகமட்டிலும் நின்றது" எனக் கூறுவர்.

ஆயின் இங்ஙனம் திருவிளையாடல் யார் பொருட்டு நடந்ததென்பார் கூற்றுக்கு மறுமொழியின்று.

மேலும், மாணிக்கவாசக சுவாமிகள், நரியைக் குதிரை யாக்கிய திருவிளையாடலை வெகுவாகக் கூறியிருப்பது மன்றி தம்பொருட்டு நடந்ததாகவும் கூறியிருக்கின்றார்.

(1) குதிரையைக் கொண்டு குடநாடதன் மிசை சதுபடச் சாத்தாய்த்தானெழுந்தருளியும்.

(2) நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்.

(3) மதுரைப் பெருநன்மானகரிருந்து குதிரைச் சேவகனாகிய கொள்கையும்.

(4) பரிமாவின் மிசை பயின்ற வண்ணமும்.

(5) பந்தம்பரியப் பரிமேற் கொண்டான்றந்த அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்கா ணம்மானாய்.

(6) ஞாலமிகப் பரிமேல் கொண்டு நமையாண்டான்.

(7) வெள்ளைக் கலிங்கத்தர் வெண்டிரு முண்டத்தர்.
பள்ளிக்குப் பாயத்தரன்னே யென்னும்,
பள்ளிக்குப்பாயத்தர் பாய்பரிமேல் கொண்டென்
னுள்ளங்கவர்வரா லன்னே யென்னும்.

(8) நற்பரிமேல் வருவான்.

(9) பரிமிசை வந்த வள்ளல்.

(10) குதிரை மறைத் தன்ன சோதி கழுக்கடைக் கைப்பிடித்துக் குதிரையின்மேல் வந்து கூடிடுமேல் குடிகேடு கண்டீர் மதுரையர் மன்னன் மறுபிறப் போட மறித்திடுமே.

(11) பரிமேற் கொண்ட பாண்டியனார்.

(12) நரியைக் குதிரைப்பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்து.

எனக் கூறியருளிய பாடல் சிதைவுகளால் தம்பொருட்டு மேல் கண்ட திருவிளையாடல் நடந்ததாக விதந்து கூறியிருத்தல் காண்க.

மேலும் திருநாவுக்கரசு சுவாமிகள், தமது திருப்பதிகத்தில் பிட்டுக்கு மண் சுமந்து வைகைக்கரையில் நின்றதை "வையைத் திருக்கோட்டில் நின்றதோர் திறமுந்தோன்றும்" என்னும் பதங்க ளால் குறிப்பித்திருக்கின்றார். ஆகவே மாணிக்கவாசக சுவாமிகள் திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு முன்னிருந்த பெரியாரென்பது புல னாம்.

ஆயின், "தேனமர் சோலைத் திருவாரூரில் ஞானந்தன்னை நல்கிய நன்மையும்" என மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவது சுந்தரர்க்கு அடிமையோலை காட்டி ஞானமூட்டியதைக் குறிப்படவில்லையோவெ னின் அற்றன்று. சுந்தரர் ஆரூரில் பிறந்தாரே யன்றி அவர் ஞானம் பெற்றுக்கொண்டது திருவெண்ணெய் நல்லூரிலாம். இக்கருத்துப் பற்றியே, சுந்தர மூர்த்தி நாயனார், "திருவெண்ணெய்நல்லூரும் திரு நாவலூரும்" என்னும் பதிகத்தில் பாடல்கள் பத்தும் இறையவர் தம்மை திருவெண்ணெய் நல்லூரில் ஆண்டுகொண்ட திருவருளை விய ந்து கூறுகின்றார்.

"மிடுக்குண்டென்றோடி யோர்வெற் பெடுத்தான் வலியை நெரித்தார் அடக்கங்கொண்டு ஆவணங்காட்டி நல்வெண்ணெய்யூராளுங் கொண் டார்" எனக்கூறியிருத்தலுங்காண்க.

இவவாறே,

"கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்
கழுக்குன்றதனில் வழுக்காதிருந்தும்"

எனச் சுவாமிகள் கூறியது ஞான சம்பந்தரைப் பற்றியெனச் சிலர் கூறுவர். ஆயின், சம்பந்தருக்கு ஞானப் பாலூட்டிய விசேட

மிருக்கக் காட்சி கொடுத்ததை விசேடித்துக் கூற நியாயமில்லை. தமக்கே அவ்விதம் காட்சி கொடுத்தாரென்பது தோன்ற,

திருக்கழுக்குன்றப்பதிகத்தில்,

" பிட்டுநேர்பட மண் சுமந்த
பெருந்துறைப் பெரும்பித்தனே
சட்டநேர்பட வந்திலாத
சழக்கனேனுனைச் சார்ந்திலேன்
சிட்டனே சிவலோகனே சிறு
நாயினுங்கடையாயவெங்
கட்டனேனையுமாட்கொள்வான் வந்து
காட்டினாய் கழுக் குன்றிலே "

எனக் கூறியிருத்தல் காண்க.

இனி மாணிக்கவாசக சுவாமிகள் குதிரை வாங்குவான் சென்ற வழி பெருந்துறையில் பேராசிரியரைக் கண்டாரெனச் சரிதங்கூறுகின்றது. சாதாரணமாக ஜனங்கள், ஆவுடையார் கோயிலைப் பெருந்துறையென்று வழங்குகின்றார்கள். இதன் உண்மையை ஒரு சிறிதாராய்வோம்.

வாதவூர்ப் புராணத்தினுஃ பழமைகொண்ட திருவிளையாடல் புராணத்தை முதலில் ஆராய்வோம்.

மாணிக்கவாசகர், அரிமர்த்தன பாண்டியனுக்கு முதல் மந்திரியாயிருந்து தென்னவன் பிரம்மராயனெனப்பேர் பெற்றிருந்தும், இக்கொடிய வெம்பாசம் குரவனருளன்றி நீங்குதலரிதெனக் கருதியும்,

" கன்னக்காதலனிடத்தன்பு கலந்துவைத் தொழுகும்
உன்ளக்காரிகை மடந்தை போலும்பரைக் காப்பான்
பள்ளக்காரியுண்டவனிடத்துள்ளன்பு பதிந்து
கொள்ளக்காவல னிடையுறத் தொழிலு முட்காண்டார் "

இவ்வண்ணம் நிகழுங்கால் குதிரைப்பாகர் அரசனவைக்கு வந்து இறந்தன போகமீதியுள்ள பரியாவும்.

" நிறைந்த நோயவும், நெடிது மூப்புடையவுமன்றி,
சிறந்த வாம்பரி யொன்றிலை தேர்ந்திடின் என்றார் "

அது கேட்டு அரசனும் வாதவூர் வள்ளலை நோக்கி நீர் நமது அறை திறந்து வேண்டும் நிதி யெடுத்து நமது கடல் துறையில் வந்துள்ள குதிரை வாங்கி வாருமென விடுத்தார். இக்கருத்தையே திருவியாடல் புராணக்காரர்.

"வேலையந்துறையில் வந்திறங்குவதெரிந்து, வென்றிவாம்பரி கொடுவரப்போமென்று விடுத்தான்" எனக் கூறினர் மேற்கண்ட திருப்பெருந்துறைக் கடற்கரையோரத்துள தென்பது.

பொருங்கடல னீகமோடு போய்ப் புறவடுத்த
விருங்கட மளப்பில கடந்தெழு பிறப்பாங்
கருங்கடல் கடக்க வருவார் கருணை வெள்ளப்
பெருங்கடல் நிறைந்ததுறை பெருந்துறை யடைத்தார்"

என்னும் பாடலால் இனிது புலனும். இனியும் மேற் சொன்ன பெருந்துறை மேனாட்டிலுள்ள தென்பது.

"குதிரையைக் கொண்டு குடநாடதன்மிசை சதுர் படச் சாத்தாய்த் தானெழுந்தருளியும்" என்னும் அருமைத் திருவாக்கு களே சான்று பகர்கின்றன.

இதிவ்விதமிருக்க வாதவூர்ப் புராணக்காரர் குதிரைகள் சோழநாட்டின் கடற்கரையில் வந்துள வென்றும் பெருந்துறை யென்பதற்கு வீடுபேற்றிற்குத் தக்கதுறையாமென்றும் அபிமானப் பொருள் கூறத் தொடங்கிவிட்டார். இவர் காலத்திற்றான் ஆவுடையார் கோயிலுக்கு, திருப்பெருந்துறை யெனப் பெயர் வழங்குவதாயிற்றெ‌ன நினைக்க இடமுண்டு. ஆவுடையார்கோயில், அம்பலம் நவீனமன்றோ என்பதற்கு சுவாமிகள் காலத்தில் கோயில் இல்லை யென்பார் ஒரு சிலர். அங்ஙனமாயின் கோயில் திருப்பணிக்காக, சுவாமிகள் பெரும்பணம் செலவழித்ததாகக் கூறப்படுவதுமன்றி, கோயில் உண்டென்பது.

"முந்திய முதல் நடு இறுதியு மானாய்
மூவருமறிகிலர் யாவர் மற்றறிவார்.
பந்தணை விரலியும் நீயும் நின்னடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங்காட்டி
திருப்பெருந்துறை யுறைகோவிலுங்காட்டி
அந்தணனாவதுங் காட்டி வந்தாண்டாய்
ஆரமுதே பள்ளி யெழுந்தருளாயே"

என்னும் ஸ்வாமிகள் வாக்கால் ஐயமற உணரலாம்.

(தொடரும்).

N. சுந்தரமய்யர், ஆலப்புழை.

நாம் உட்கொள்ளும் ஆகாரம்:—இரத்தம்

ஸ்ரீமாந் O A நாராயண ஸ்வாமி அய்யரவர்கள்.

ஏதாவது காயம் படும்போது நம்முடலிலிருந்து சிகப்பு நிறத்துடன் இரத்தம் வெளியே வருவதைப் பார்த்திருக்கிறோம். ஒருசொட்டு இரத்தத்தை ஒரு பூதக்கண்ணாடியால் பரிசோதித்தால், அது ஓர் தனித் திரவ பதார்த்த மல்ல வென்றும், காணலாம். தனித்தனி சிகப்பு அணுக்கள் ஓர் மஞ்சள் நிறமான திரவ பதார்த்தத்தில் மிதக்கிறதே யொழிய வேறல்ல.

இரத்தமானது உடம்பிற்குள்ளிருக்கும்போது, ஓர் நீர் போல் இருப்பினும், வெளியே வரும்போது கட்டியாக இறுகிவிடும். இவ் விதமான ஏற்பாட்டினால், நமக்கு மிகவும் நன்மை உண்டாகிறது. இஃதில்லாவிடில், ஒருவனுக்கு ஓர் காயம் பட்டால், ஓயாமல் இரத்தம் வெளியே ஓட அவன் இறந்து போவான்.

நம்முடைய மார்பின் இடது பக்கத்தில் இருதயம் (Heart) என்னும் பைபோன்ற ஓர் அங்கமிருக்கிறது. இது அடிக்கடி சுருங்குவதால், இதனுள்ளிருக்கும் இரத்தம் வெளியே வருகிறது. இருதயத்திற்கு இரத்தமானது நாளங்களில் (veins) வந்து, நாடிகளின் (arteries) வழியாக வெளியே வருகிறது. இவைகளுள் பின் சொன்னவை இருதயத்தினின்று வெளியே வரும்போது, அனேக கிளைகளாகப் பிரிந்துவிடுகின்றன. இவைதாம் நாடிகளின்வழியே இரத்தத்தைப் பரவும்படி செய்கின்றன. நாடிகளைப் போலல்லாமல் நாளங்கள் இருதயத்தை அணுக அணுகப்பெரிதாக ஆயிக்கொண்டே வருகின்றன. இவைகளுள் நாளங்கள் மிருதுவான தோலால் ஆக்கப்பட்டிருக்கிறபடியால், அவைகளில் காயம்பட்டபோதிலும் அவைகள் ஒட்டிக்கொள்ளும். நாடிகள் மிகவும் கெட்டியாய் இருக்கிறபடியால் காயம்பட்டால் இரத்தம் கொட்டிக்கொண்டே இருக்கும். இரத்தமானது இந்நாடிகளின் உட்புறத்தில் மோதுவதால், சத்தமுண்டாவதை மார்பினிடத்திலும், பொட்டினருகிலும் கண்டுகொள்ளலாம். இதனால்தான் வைத்தியர்கள், மணிக்கட்டினருகில், தொட்டுப்பார்த்து அங்குள்ள நாடிகளின் ஸ்திதியைக் கண்டு, வியாதியஸ்தர் ஸ்திதியை நிர்ணயிக்கின்றனர்.

இப்பொழுது இருதயத்திற்கும், சுவாஸப் பைகளுக்கும் உள்ள சம்பந்தத்தைக் கவனிப்போம். மார்பில், இருதயத்தின் வலது, இடது, முன், பின், பக்கங்களிலும், கடற்பஞ்சைப் போல துவாரங்கள் நிறைந்த இரண்டு கண்டங்கள் உள. இவைதாம் சுவாஸப்பைகள். நாம் வெளியிலிருந்து மூக்கின் வழியே உட்கொள்ளும் வாயு சுவாஸக்குழாய்களின் மூலமாய், சுவாஸப் பைகளுக்குள் பிரவேசிக்கின்றது. இவ் வாய்வு பட்டு சுத்தப்படுவதற்காக இருதயத்தினின்று இரக்தம் சுவாஸப் பையின் புறத்தில் ஓடிவருகிறது.

நம்முடைய இருதயமானது அறைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. நாமுட்கொள்ளும் உணவுகளாலாகிய அன்னப் பாகோடுசேர்ந்து பின்னும் வேறு காரணம் கொண்டும், இரக்தம் அசுத்தமாய்விட்டபடியால், கருப்பாகவிருக்கும். இவ்விரக்தம், இதன் கீழிருக்கும் மடிப்புமுடியுள்ள சிறு துவாரத்தின்வழியே இரண்டாம் அறையிற் பிரவேசிக்கிறது. இத்துவாரம் ஓர் மாம்ஸத்துண்டால் ஆக்கப்பட்டிருக்கிறது. அது இரக்தத்தை உள்ளேமாத்திரம் விடுமேயொழிய, மறுபடியும் வெளியே போகவிடாது; ஆதலால் உள்ளே போன இரக்தம் வெளியே வரமுடியாது. மறுபடியும் இருதயம் சுருங்கும்போது, இவ்வறையிலுள்ள இரக்தம் பக்கத்திலுள்ள குழாயின் வழியே சுவாஸப்பைக்குள் போகின்றது. இங்கே அந்த சுத்தமான இரக்தம் நாமுட்கொள்ளும் பிராணவாயுவோடு சேர்ந்து சுத்தப்பட்டு, சிவந்த இரக்தமாக மாறிவிடுகிறது. இந்த சுத்த இரக்தமானது அங்கிருக்கும் சிறிய நாடிகளின் வழியே மறுபடியும் இருதயத்தை அண்டுகிறது. இங்கிருந்து, சுத்த இரக்தம் பெரிய நாளத்தின் வழியே உடம்பு முழுவதும் பரவுகிறது. இப்படி நல்ல இரக்தம் பரவாமலிருந்தால் அது சாவுக்குக் காரணமாகும்.

இப்பொழுது இருதயத்திற்கும், சுவாஸாசயத்திற்குமுள்ள சம்பந்தத்தை அறிந்துகொண்டோம். ஆகவே, ஒருவன் ஆகாரமுண்ணாமல் பலநாளிருக்கலாம். அதனால் இரக்தவிர்த்தி குறைந்தபோதிலும் கொஞ்ச காலம் ஜீவிக்கலாம். ஆனால் நல்ல காற்றில்லாமல் கொஞ்ச நேரமிருந்தாலும், மிகவும் கஷ்டமேயாகும். (இன்னும் வரும்)

உ. அ. நாராயணஸ்வாமி.

ஆத்மஞானம்.

ஸ்ரீமத் சுவாமி சிவாநந்த யோகிகள்.

சுகம் வந்தால் சுகமாகப் பாராட்டாமலும் துன்பம் வந்தால் துன்பமாகப் பாராட்டாமலு மெவனிருக்கிறானோ அவனே ஞானி. ஒவ்வொரு மனிதனும் தான் செய்யும நன்மை தின்மைகளுக்குத் தக்கவாறு பலன்களை யடைகின்றான். ஆதலால் ஒவ்வொரு மனிதனும் எப்பொழுதுஞ் சற்கருமங்களையே செய்யக்கடமைப்பட்டிருக்கிறான். ஏனெனில் நன்மை விதைத்தால் நன்மை விளையும் தின்மை விதைத்தால் தின்மை விளையும் என்பது இயற்கையின் (Nature) ஒழுங்கு.

சாதாரணமாக ஒருவன் சுண்டைச்செடியை நடுவானாயின் அதன் பலனாக சுண்டைக்காய்களையே பறிக்கின்றான். வெண்டைச் செடியை நடுவானாயின் அதன் பலனாக வெண்டைக்காய்களையே பறிக்கின்றான். மேலும் உப்பைத்தின்றால் கைப்பே கிடைக்கின்றது. இனிப்பைத் தின்றால் இனிமையே கிடைக்கின்றது. நெருப்பு நெருப்பின் குணத்தையே காட்டுகின்றது. ஜலம் ஜலத்தின் குணத்தையே காட்டுகின்றது. இதுவே இயற்கை அல்லது மஹாசக்தியின் ஒழுங்கு. ஆதலால் நற்செய்கை நற்பலனையேதரும் துற்செய்கை துற்பலனையே தரும் என்பதிற் சந்தேகமில்லை. இவைகளை ஒவ்வொருவருந் தங்கள் ஜீவிதகாலத்தில் அனுபவமூலமாக அறியலாம்.

ஒருவன் மற்றவர்களை அன்பாய் நடத்துவானானால் மற்றவர்களு மவனை அவ்விதமே நடத்துகின்றார்கள். ஒருவன் மற்றவர்களை விரோதிப்பானானால் மற்றவர்களுமவனை விரோதிக்கின்றார்கள். ஒருவன் மற்றொருவனிடத்தில் கோபித்துப் பேசுவானானால் மற்றவனும் அவனைக் கோபித்துப் பேசுகின்றான். ஒருவன தன்னலத்தை மாத்திரம் கருதாது பிறர் நலத்தையுங் கருதுவானானால் அவர்களும் தம் நலத்தை மாத்திரம் கருதாது அவன் நலத்தைக் கருதுகின்றார்கள். ஆகவே ஒவ்வொருவருடைய சுகதுக்கத்திற்கும் அவரவர்களே காரணம். அவர்கள் செய்கைகளே காரணம். பிறரை நோவதிற் பயனென்ன. உப்பைத் தின்கின்றான் ஒருவன், தாகமெடுக்கின்றது. நஞ்சைத் தின்கின்றான் ஒருவன், மரணம் சம்பவிக்கின்றது. நெருப்பைக் கையில்வாருகின்றான் ஒருவன், கை வெந்துபோகின்றது. குற்றவாளியார்? பிறன்

குழந்தைக்குக் கெடுதிசெய்தான் ஒருவன், தன் குழந்தைக்குக் கெடுதி நேரிட்டது. குற்றவாளி யார்? தனக்குத் தகாததை கிரம விரோதமாக ஒருவன் செய்வானானால் அதற்கேற்பட்டிருக்கும் பலனை அவனடைகிறான். கடவுளானவர் "செய்கைக்குத் தக்கபடி பலன்" உண்டாகும்படி செய்துவிட்டு சகலத்தையும் சாக்ஷிபோல் பார்த்துக் கொண்டிருக்கிறார். கிணற்றிற் சாடினான், மரணமடைந்தான். விரைவாய்ச் சாடினான் காலொடிந்தது. குற்றவாளி யார்? களவு செய்தான், தண்டனையடைந்தான், வழிப்பறி பறித்தான் சிறையிலடைபட்டான். ராஜத் துரோகஞ் செய்தான் நாடுகடத்தப்பட்டான்; குற்றவாளி யார்? அரசனா, செய்தவனா? அவைபோல ஒருவன் கொடும்பாதகங்களைச் செய்துவிட்டு அதன் பலனாகவடையும் கஷ்டங்களுக்கு உத்தரவாதி கடவுளா அல்லது பாதகங்களைச் செய்தவனா? அனியாயமாகப் பணத்தை சம்பாதித்தான் அது அவ்வழியாகவே போய்விட்டது. ஒருவன் பிறகுடும்பங்களில் ஒற்றுமைக் கேட்டையுண்டுபண்ணினான், தன் குடும்பம் நாசமடைந்தது. ஒருவன் பிறனுக்கிடுக்கண் செய்தான். அதன் பலனாக தனக்கிடுக்கண் நேரிட்டது உத்தரவாதி யார? கடவுளா? செய்தவனா? கடவுளை நோவதிற் பயனென்ன. கடவுளுக்கு வழிபாடு நடத்திப் பயனென்ன. கடவுளுக்குக் காவடிகட்டிப் பயனென்ன. அவர் கைக்கூலித் தெய்வமா? இல்லையே. அல்லது அவர் வறியவரா? இல்லையே. ஒருவன் செய்து வைக்கும் நைவேத்தியங்களைக்கொண்டு பரமசந்தோஷத்தையடையும்படி அவர் தின்பண்டக் கொதியரா? இல்லையே. அல்லது ஒருவன் செய்யும் களப கஸ்தூரி பந்நீர் சந்தனாதி வழிபாடுகளினால் சந்தோஷமடைய அவர் கேவலம் உல்லாசப் பிரியரா? இல்லையே. அல்லது வெறும் பாடல்களினால் பிரியமடைய அவர் புகழ்ச்சிப் பிரியரா? இல்லையே. சகல வாசனாதி புஷ்பங்களையும் உணவு பதார்த்தங்களையும் இன்னும் யாவற்றையும் சிருஷ்டித்து அவைகளை ஜீவர்கள் அனுபவிக்கும்படி செய்தவருக்கு இவைகள் பெருங்காரியமாகுமா? ஆகவேயாகா. ஆதலால் இவ்வித வழிபாடுகளினாலும் வெறும் புகழ்ச்சியினாலும் கடவுள் நம் கையில் அகப்படுகிறவரல்ல. செய்கைகளின் குணத்தை யனுசரித்துப் பலன் நிகழும்படி ஒழுங்கையும் சட்டத்தையும் ஏற்படுத்திவிட்டு அதை ஜீவர்கள் அறியும்படி தாமேயவர்கள் சரீரத்தினுறைந்து ஞானமயமாய் பிரகாசிக்கின்றார். இதுவே மனச்சாக்ஷியென்று சொல்லப்படுகிறது. இம்மனச்சாக்ஷியின் போதனைகளை சிறி

தேனும் மதியாது அலக்ஷியமாய் விட்டுவிட்டு அகங்காரத்தினால் தம் மனம்போன போக்கெல்லாம் கர்மங்களைச் செய்து மனிதன் மோசத்தையும் நாசத்தையும் அடைகிறான். ஒருவன் சமீபத்திலிருக்கிற நிலைக்கண்ணாடியைத் தானென்றெண்ணாமல் தான் தூரநின்று அதைப் பார்ப்பானானால் கண்ணாடியின் ரூபம் தெரியவரும். அதுபோலவே மனதைத் தானென்றெண்ணாமல் தான் வேறு, தானழிவற்ற ஆத்ம சொரூபம், மனம் வேறு என்று தூரநின்று பார்ப்பானானால் மனதின் போக்குத் தெரியவரும். பிற்பாடு அம்மனதை அடக்கியாளுதல் மனதை ஒருநிலைமைப்படுத்தல், முதலிய பல வழிகளில் வேலை செய்து வருவானானால் மனது காலக்கிரமங்கொண்டு அடங்கிவிடும். பிற்பாடு அம்மனது தம்மமைப்போல் அவனையிழுத்துக்கொண்டுசென்று தீய கர்மங்களில் உட்படுத்தி நாசத்தை உண்டுபண்ணாது. அதுகாலையில் அவன் அம்மனதைப்பார்த்து ஹே மனமே! நில்லென்றால் நில். என்னைக்கொண்டு பாவகருமங்களில் தள்ளிவிடாதே, என்று சொல்லுவானானால் உடன் அது அடங்கிநிற்கும். இவ்விதம் பழகி ஒருவன் துர்க்கருமங்களை விட்டு ஒரு நிமிஷநேரமேனும் இடைவிடாமல் சதா நற்கருமங்களையே செய்துகொண்டுவரலாம். நற்கருமங்கள் செய்து வருவதினால் புண்ணியம் பெருகி நற்கதியை அடைகிறான். ஒருவனுக்கு சதா சற்கருமங்களைச் செய்துகொண்டிருக்க இயலாவிடினும் துர்க்கருமங்கள் செய்யாமலிருக்கக் கூடும். இது பாவங்களை அதிகப் படுத்தாமல் அம்மட்டிலும் குணத்தைக் கொடுக்கின்றது. இதற்கு மாறாக ஒருவன் சற்கருமங்கள் செய்யாமலும் துற்கருமங்களையே செய்துகொண்டும் வருவானானால் பாவங்கள் வட்டிக்கு வட்டியாகவளர்ந்து பெருங்குவியல்களாகி மஹாநரகத்தையடைகிறான். மனத்தாலும் வாக்காலும் தேகத்தாலும் செய்யப்படும் தீயகருமங்களும் பாவமேயாதலால் மனதினாற் கூடவும் தீமை செய்ய நினைத்தல் கூடாது ஏனெனின் மனதில் பலசமயம் நினைக்கும் நினைப்பே செய்கைக்குக் காரணமாகிறது. தீய நினைவுகள் வராமற்றடுப்பதும் அரிதாகையால் அவைகள் வராவண்ணம் எப்பொழுதும் நற்காரியங்களைச் சிந்திக்கவும் பேசவும் பழகிவரவேண்டும். இவ்விதம் நற்பேச்சினாலும், நற்சிந்திப்பினாலும், நற்சம்பாஷணையினாலும் ஒருவனுக்குத் தீய கருமங்களை ஒழித்து நிறுத்தல் கூடும்.

சிவானந்தயோகி.

ஓர் இராணியின் சாபம்.

ஸ்ரீமான் S. தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள்.

குறிபபு;—இற்றைக்கு ஏறக்குறைய 230 வருடங்களுக்கு முன் திருவிதாங்கோட்டு ராஜ்யத்தை உமையம்மை ராணி என்றொரு மகாராணி ஆண்டு வந்தாள். அவளுக்கு ஆறு ஆண்மக்க ளிருந்தனர். இராஜத் துரோகிகளாகிய மாடம்பிமார், எட்டுவீட்டுப் பிள்ளைமார் முதலியோர் அவருள் ஐந்து மக்களைச் சதிவாக ஒரு குளத்துக்கு அழைத்துக் கொண்டுபோய், தண்ணீரில் அமிழ்த்திக் கொன்றுவிட்டார்கள். ஏக கால்த்தில் ஐந்து குழந்தைகளையும் பிரேதங்களாகக் கண்ட இராணி மனமெரிந்து அப்பாதகரை எல்லாம் சபிக்கின்றனள்; சாபம் பலித்ததென்பது திருவிதாங்கோட்டுச் சரித்திரத்தால் நன்கு விளங்கும். ஸ்ரீபத்மநாபன் இராணியின் குலதெய்வமாம்.

மக்காள் ! மக்காள் ! வளர்த்த பைங்கிளிகாள்
வஞ்சி நாடாள வந்த மகிபர்காள் !
பாவியென் மடியும் பக்கமும் இருந்தீர் !
இக்கணமன்றோ இறங்கிச் சென்றீர் !
எமனும் இதற்குள் எங்கிருந் திறங்கினன்?
உயிரிழந் தீரோ ? உறங்குகின் றீரோ?
ஐம்பொறி கெட்டேன் அறிவு மோய்ந்திட
ஐவரும் குளத்தில் ஆழ்ந்து போனீரோ ?
ஒருகுலைக் காயும் ஒன்றாய் உதிர்ந்தவோ !
வஞ்சனை ! வஞ்சனை !! மாடம் பிகளும்
எட்டு வீட்டாரும் இயற்றிய வஞ்சனை.
இரக்கம் சிறிதும் இல்லா அரக்கர்,
“ கொட்டாரம் ” தீக் கொளுத்திய நீசர்,
மாமன் ஆதித்த வர்மனை விஷத்தால்
மாளச் செய்தமா பாதகர், ஐயோ !
நாடும் இவரால் காடாய் விட்டதே !
புலிசூழ் வனத்தொரு புல்வாய் ஆனேன் !
நாடிருந்தென்ன ? நகரிருந்தென்ன ?
‘ அணிதேர் புரவி ஆளி ’ ருந்தென்ன ?
உண்மையில் உற்றார் ஒருவரும் இல்லை. இன்

றெவரும் துணையிலா ஏழையாய் நின்றேன்.
எமன்வாய் தவறிய இவ்வொரு மகற்காய்
உயிர்கொண்டிருந்தேன்! உயிர்கொண்டிருந்தேன்!
கொடியர்! கொடியர்!! அறவே கொடியர்!!!
ஏதும் ஒரு தயை இலாத சண்டாளர்.
பச்சைப் பசலைகள் பாலகர் என்செய்தார்?
நினைக்கும் போதென் நெஞ்சில் மூளுதீ
ஐயோ! ஐயோ!! அறையற் பாலதோ?
பதும நாபா! பார்க்கடல் வாசா!
அரவணைமேல் கண் அயர்ந்தே போனையோ?
துரியோதனர்க்கும் துணையாய் விட்டையோ!
எட்டு வீட்டாதி இராட்சஸப் பேய்காள்!
என் மனம் சுடும் இவ்வெரி போய் உங்கள்
சுற்றமும் குலமும் சுடும்! சுடும்!! மேலுமிவ்
வினைத்தில் எல்லாம் வேல்த்திரளாய் உம்
மனத்தில் ஊடுருவி வாட்டுதல் திடமே!

S. தேசிக விநாயகம் பிள்ளை.

சொல்வது வேறு, செல்வது வேறு.

ஸ்ரீமான் C. N. அநந்தராமய்யா சாஸ்திரியவர்கள் M. A. M. R. A. S

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரென்னும் கவிஞன் அந்யாபதேச சதகம் எனப் பெயர் வாய்ந்த நூறு சுலோகங்கள் வடமொழியிற் செய்துளார். அந்யாபதேசசதகமென்றால் சொல்வது ஒன்றைப்பற்றிகுறிப்பது மறுபொருளொன்றைப்பற்றியெனக் காண்பதுவே. மேற்கூறின நூறு சுலோகங்களிலும் இவ்வணி பொருந்தியுளது.

நம் வஞ்சிநாட்டில் அரசராயுள்ள வடமொழிக் கவிஞர்களில் முதன்மை பெற்ற ஸ்வாதி திருநாள் மஹாராஜா இந்நூறு சுலோகங்களுக்கும் சிறு பீடிகைகள் எழுதினர். நம்மை யாண்டுவரும்

புண்ணியவானுடைய பிதா இவற்றிற் பாதி சுலோகங்கட்கு ஸம்ஸ்கிருதத்தில் உரை எழுதினர். இவர் மருமகனும் நம் பாஷைகளில் அன்பு மிகுந்தவருமான கேரளவர்ம்மா வலியகோயிற்றம்பிரான் அவர்கள் நூறு சுலோகங்களையும் மலையாளத்தில் மொழி பெயர்த்தார். நம் ஹஜூர்க் கச்சேரியில் கல்வி விஷயத்திற்கு அண்டர் ஸிக்ரிடடரியாயிருக்கும் மாவேலிக்கரை ராஜ ராஜ வர்ம்மா அவர்கள் இம்மொழி பெயர்ப்புக்கு உரை எழுதியுளார்.

தமிழ்ப் படிப்பவர்கட்கு நீலகண்ட தீக்ஷிதருடைய உபதேசங்கள் பயன்பட வேண்டுமென்றெண்ணி யான் இதெழுதலானேன். இதெழுதுவதில் மேற் கூறின உரைகள் யாவற்றிற்கும் யான்கடமைப்பட்டுளேன். என் மொழி பெயர்ப்புடன் சிற்சில குறிப்புகளும் எழுதுகிறேன்.

(1) சாலைகளில் வழி நடந்து களைப்படையும் ஜனங்கள் ஒரு மிக்க நிழல் தரும் மரம் நோக்கிச் சென்று இளைப்பாறுகின்றனர். அவர்களிலொருவன் மனதில், மரத்திற்கு நன்றி பாராட்டுகிறான்; ஒருவன் தடிக்கம்புக்காக எந்தக்கிளைகளை வெட்டுவதென்று யோசிக்கிறான்: ஒருவன் தன் வீட்டுக் கதவுக்கு இம்மரத்தை அடியோடே வெட்டிக்கொண்டு போகவேண்டுமென்று நிச்சயிக்கின்றான்.

தங்கட்கு உபகாரஞ் செய்யும் பிரபுவினிடத்தில் நற்குணத்தார்க்கும் நடுத்தரத்தினர்க்கும் தீக்குணத்தார்க்கும் இருக்கக்கூடும் எண்ணத்தை விளக்க இவ்வாறு விளம்பினர்.

(2) நாய்கள் எவ்வளவோ இருக்கின்றன; பன்றிக் குட்டிகளைக் கண்டால் இவை விடவே விடா; ஓடிச்சென்று அவைகளைக் கடித்து அவைகளின் வருத்தத்தைப் பார்த்து மகிழும்: இத்தகைய நாய்கள் இருந்தாலென்ன? தொலைந்தாலென்ன? பெருமலை மேல் வாழ்ந்து நினைத்தபடியே திரிந்து விளையாட்டாகக் "காருலூகல நிகரடிக்களிறை" யே கொன்று மிருகங்களுக்கெல்லாம் அரசெனப் பெயர் கொள்ளும் சிங்கத்தின் வாழ்வன்றோ வாழ்வு?

இழிவான நிலைமையை விரும்பாது உயர்ந்த நிலைமையில் நாம் இருக்க வேண்டும் என்பது கருத்து.

(3) சிங்கமே! நீ மிருகங்களுக்கு அரசனாகின்றனையே. அவைகட்கு நீ உணவுக்கு யாதாவது ஈகின்றனையா? அவைகளை புலி முதலியவற்றின் கடுமையிலிருந்து காக்கின்றனையா? ஒன்றும் இல்லை. ஆனாலும் உன் பாக்கியமே பாக்கியம். உனக்கு வந்தனமளிக்கும் பொருட்டு ஆவலுடன், புல் முதலியவற்றைத் தின்றுவிட்டு வந்து காத்திருக்கும் அவைகட்காக உன் குகையிலிருந்து ஒரு தடவை வெளியிற் கிளம்புவது கூட வருத்தமா?

அரசர்கள் குடிகளையும் பிரபுக்கள் ஏழைகளையும் காக்கவேண்டுமென்பதையும், அவ்வாறு காக்காவிடினும் இவர்கள் அவர்களை ஆதரிப்பது வழக்கமென்பதையும், ஆதரிக்கவந்தவர்களைக் கூட அவர்கள் மறுத்து விடுகின்றனர் என்பதையும் வற்புறுத்துகிறார்.

(4) வீட்டாரை விட்டுப் பிராணனையும் பணயமாக்கிப் பெரிதான கடலைக் கடந்து வியாபாரிகள் சந்தனத்துக்காகக் காடு புகுகின்றனர். பாம்பே! நீ சந்தன மரங்களிலிருந்துகொண்டு கடுமையான உன் மூச்சினால் அவர்களை அகற்றி விடுகின்றனை. நீயாவது சந்தனமரைத்து உன் உடம்பிற் பூசிக்கொள்.

தானுண்பதுமில்லை பிறர்க்கு ஈவதுமில்லை பிசுக்கன் என்கிறார்.

(5) காக்கை தனக்கிருக்கும் பொருட்டு, காட்டில் சுள்ளி முதலியவற்றைத் தேடிக்கொணர்ந்து ஓர் மரத்தின் உச்சியில் பாடுபட்டுக் கூடு கட்டிற்று; ஆனால் அதிற் குடிபோவதற்கு முன்னர் அக்காடே தீக்கிரையாய்விட்டது.

பாக்கியம் கெட்ட தரித்திரன் பாடுபட்டு நேடுவது போய்விட்டால் அவன் நிலைமை இக்காகத்தின் நிலைமை போன்றதாம். பாக்கியம் கெட்டவனுக்கு முயற்சி நன்மை விளைவிப்பதில்லையென்பது கருத்து. ஆனால் முயற்சி வேண்டாமா? அது எப்பொழுதும் வேண்டியதே. பாக்கியம் உண்டாவது எக்காலமெனக் கூறவல்லவரில்லை. நம்முயற்சி முதிரும் பொழுது கடவுளின் அருளும் உண்டாவது இயற்கை.

(6) தாமரைக்குச் சந்திரனிடத்திலும் சந்திரனுக்குத் தாமரையினிடத்திலும் அன்பில்லை. அன்பில்லாமையால் அவைகட்குக் கெடு

தியுமில்லை. அழகு பொருந்தின இவைகள் அன்புடன் அமைந்திருப்பது போக இவ்வாறுவதனால் பிரமதேவனுக்குத் தான் சீர்கேடமைவது.

சிலர் அன்புடன் ஒழுகாதிருப்பதற்கு ஆக்கவும் அழிக்கவும் வல்ல பிரபு வொருவர் காரணமாகின்றார். அங்ஙனமாகும்போது பழிப்பதும் பழிக்கவேண்டியதும் பிரபுவையே தவிர அவர்களையன்று.

C. N. அனந்தராமய்ய சாஸ்திரி, M. A.

யாக்கையின் பயன்

ஸ்ரீமாந். T. S. லக்ஷ்மணன் பிள்ளையவர்கள்.

உபாதி சகிதமாகிய எண்ணரிய உயிர்களுள் எஞ்ஞான்றும் எங்கணும் நான் நானென்னும் போத வடிவில்லாது நிகழும் உயிர் ஒன்றேனும் இல்லவே இல்லை. இல்லையாயினும் ஒவ்வொருயிரும் மானிட யாக்கையைப் பெற்று பிரஹ்ம்மா முதல் பிபீலிக மீறாக எண்பத்து நான்கு லெட்சம் அச்சுமுக பேதங்களிலும் பிறந்து பிறந்து உழன்று முடிவு பெறாது மொத்துண்டு வருவது அதனதன் வினையினாலென்று வேதங்களினாலேயும் ஆன்றோர்களுடைய வாக்கியங்களினாலேயும் வெள்ளிடை மலைபோல் விளங்குகிறதன்றோ. ஜீவர்கள் வினைகள் புரிவதும் பிறவிகள் மாறுவதும் கருணா நிதியாகிய கடவுளினாலல்ல. ஜீவர்களுடைய கருமத்திற் கீடாக வேண்டினது ஈசன் கொடுப்பானல்லவா. அவன் கொடுக்கில்யார் தடுப்பார் என்ற ஐதிக சாம்பிரதாயமிருக்கிறதன்றோ. கடவுள் கருணை புரிந்து மானிட யாக்கையைக் கொடுக்க இவன் அனேக கற்பகோடி காலம் எத்துணை அருந்தவம் செய்திருக்க வேண்டும்.

வந்த வரவை மறந்து மிக்க மாதர் பொன் பூமி மயக்கத்திலாழும். இந்த மயக்கை யறுக்க, எனக்கெந்தை மெஞ்ஞான எழில்வாள் கொடுத்தான்.

என்று கருணையங்கடலாகிய தாயுமான ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளியபடி இவன் செயயும் அருந்தவத்திற்கு அன்பு கூர்ந்து கருணைக்கடவுள் ஜென்ம சாபல்லியமாகும் பொருட்டு இரவலாக

வுள்ள மானிட யாக்கையைக் கொடுத்துதவுகின்றனரன்றோ. எது போலுமெனின் உலகின்கண்ணுள்ளோர் யாதாமொரு கருமத்தை முன்னிட்டுப் பிறரிடத்தில் ஆபரணாதிகளைத்தற்காலத்திற்கு இரவலாக வாங்கி அக்கரும முடிந்தவுடன் உடமஸ்தரிடம் கொடுத்து விடுவது போலாம். ஜீவர்களும் இவ்வண்ணமாக ஈசனால் கிடைத்த யாக்கையைக் கொண்டு ஜென்ம சாபல்லியமாகிய மோட்ச சாம்பிராச்சியமடைவதற்குள்ள மார்க்கத்தில் நின்று, நானா! இத்தேக நமக்கு கிடைத்தவாறேது? யாரால் நசிப்புறும், யாரால் மோட்சமடையலாமென்றுள்ள மார்க்கத்தை விட்டு மனம், புத்தி, சித்தம், அகங்காரமென்னுங் காரணங்கள், இதற்கு விடயமாகிய சத்த, பரிச, ரூப, கந்தமென்னுந் தன்மாத்திரைகள், சுரோத்திரம், தொக்கு முதலியவுணர்வுகள், வாக்கு, பாதம், பாணிபாயுரு, உபஸ்தமென்னுங் கருமேந்திரியங்கள் இதற்கு விடமாகிய வசன, கமன, தான, விசற்கம் ஆனந்தமென்னுங் குணங்கள், பிராணன் முதலிய தச வாயுக்கள், பருவபேதங்கள், சராசர பேதங்கள், எழுவகைத் தோற்றங்கள், வருணாச்சிரம பேதங்கள், அண்ணன், தம்பி, தாய், தந்தை முதலிய பாத்தியவகைகள் முதலியனவற்றைத் தனதாகப் பாவித்து, அதுகளில் மொத்துண்டு பாலியம் யௌவன முதலிய திசைகளில் வருந்தி பெண்டு பிள்ளைகளைநம்பி, செல்வச்செருக்கினால்அகமதி கொண்டு ஈசனையும்மறந்து நன்றியற்றவனாய் நல்லோர்களையும் நிந்தனை செய்து கண்டதே காட்சி கொண்டதே கோலமென்று தன் வரவையு மறந்து மேலும் மேலும் பொருளீட்ட வேண்டுமென்றுள்ள, அவாவினாலும் துர்க் கருமமே புரிந்து விடய போகத்திற்குக்சங்காத்து கடைசியில்கருணாநிதியாகிய பரமேசனானவர் பட்சபாத மன்னியில் கீழான மார்க்கங்களில் ஆழ்த்தல் துற்சங்க சகவாசத்தினாலல்லவா. சற்சங்கம் துற்சங்கமென்பவற்றில், துற்சங்கத்தில் பல்லூழிகாலம் பழகினதாலல்லவா இவ்வித நரகத்திற்குள்ளானோம் என்று இடைவிடாது,

அசத்தி லெம்மட்டுண்டம்மட்டும் பராமுக மாகினாய். அம்மட்டு கிசத்திலுள் விழிப்பார்வையா யிப்படி நிரந்தரப் பழக்கத்தால், வசத்திலுன்மன நின்று சின்மாத்திர வடிவமாகிடின் மைந்தா கசத்ததேகத்திலிருக்கினு மானந்தக் கடல் வடிவாயே.

என்று கைவல்லிய நவநீதத்திலருளியபடி மெய்போலத் தோற்றுஞ் செகஜீவ பரமென்னும் பொய்யில், எவ்வளவு காலம் சம்மத

முண்டாயிருந்ததோ, அவ்வளவு காலமளவும், பராக்காகிய பகிர்முக சம்மந்தப்பட்டு வாளா போனேமென்று, சற்சங்கத்தில் பிரவேசித்து சற்குருநாதனை யடுத்து, அந்தர்முகமாக, நானார், இத்தேகம் வந்தவாறேது? யாரால் நிவிர்த்திக்கக் கூடுமென்று விசாரிக்குந்தோறும், ஆக நாமுன்னம் விஸ்மரணையில் விடயமே பயனாகக்கொண்டு பிறப்பிறப்பு துன்பவின்பம், மாறுக்கவலை ஒழியா சஞ்சலம், தணியா அவா முதலிய இவ்வற்றையே விநோதமாகக் கொண்டு வரையின்றிய பிறவி சாகரத்தில் நீந்திவிட்டோமே.

இப்போது நமக்குக் கிடைத்த பாக்கியமானது முன் நமக்கு மோட்சத்திற்கு சாதனமாகிய தேகத்தைக் கொடுத்துதவிய, பரமேசனே மானிடவுருக் கொண்டு சற்குரு நாதனாக வந்து இரட்சிக்கும் பொருட்டு உபதேசித்த வாக்கியங்களினால் முன் சொன்ன விடங்களில் உபாதி பூணவருமன்றோ அதுவும் பிறவிமாற மாறும், மாறினும் பூர்வ ஜென்மம் சமஸ்காரத்தால் சற்றே நினைவு வரும். வரின் தவக்குறையில் நின்றெடுத்தாள வேண்டிவரும். அது மேலிட்டால் வைராக்கியம் வரும். அதுவும் பிறவி மேலிட்டால் முடிவினிலையுறும். இது மேலிட்டால் ஞானத்திற் சற்றே விசாரமுறும். அதுவும் பிறப்புமாற மாற நழுவி நழுவி எத்தனையோ சென்மாந்தரத்தில் நிலையுறும். அதுவும் சிரவணம் மனனம் நிதித்தியாசனம் சமாதி சாட்சாத்காரம் என வைந்து பாகமாம். இவ்வற்றுளொவ்வொன்று மனந்த பிறவிகளினிலைத்தலரிது. இவ்வைந்தும் வாய்க்கினும் சகச சமாதிகை கூடலரிது. கைகூடினும் சொரூப சமாதியும் சகச சமாதியும் ஏகமாகலரிது. இங்ஙனம் கைகூடலன்றோ முத்தி. இவ்வளவும் சற்சங்கப் பழக்கமாகலின், அசத்திலெம்மட்டுண்டம் மட்டும்பராமுகமாகினாய். அம்மட்டுநிசத்திலுள் ஏழிப்பார்வையாயிப்படி நிரந்தர பழக்கத்தால்என்றனர் ஆன்றோர். துற்சங்கத்திலெவ்வளவு காலம் பழகினேமோ அவ்வளவு காலமும் சற்சங்கத்தில் முயன்றாலன்றோ இரவலாக வாங்கின தேகத்தை ஒப்புவிக்க முடியும். அப்படிக்கல்லாது விடய போகத்திற்கங்காத்து திரிவோமாயின், எறும்பு கடை எண்பத்து நான்கு லட்சம் அச்சுமுக பேதங்களிலும்' பிறந்து பிறந்து மீளுவதற்கிடமன்னியிலாய்விடுவோ மன்றோ.

" தன்னைத்தான் தேடாச்சதிகாரரேன் பிறந்தார், அன்னத்தால் வந்தவுடலார்தாமார் முன்னம் விடுத்தவுடலெத்தனையோ. மீண்டு மீண்டினபா லெடுத்தவுட னூறுயிரம் " என்றும்.

"உள்ளது போதமென்றா தேடாகாளம்
உலக மோக்காள மென்றா தேடாகாளம்
வெள்ள வெளியீ தென்றா தேடாகாளம்
வேதஞ் சொன்ன வண்ண மூதேடாகாளம்" என்றும்

"கேட்டலுடன் சிந்தித்தல் கேடிலாமெய்த் தவத்தால்
வாட்டமறு வுற்பவநோய் மாறுமோ- நாட்டமுற்று
மெய்யான நிட்டையினை மேவினர்கட் கன்றோதான்
பொய்யாம் பிறப்பிறப்புப் போம்" என்றும்

தூலசூக்கும வஞ்ஞானக் தோன்று மூன்றவத்தை தாமும்
காலமோர் மூன்றுஞ் சென்மக்கடலெழும் கல்லோலங்கள்
போலவே வந்து வந்து போனவெத்தனை யென்பேனு
ஞலமர் கடவுளாணை யவைக்கெல்லாஞ்சாட்சி நீயே.

என்றும் கூறிய மகா வாக்கியங்களைக் கடைப்பிடித்து ஒழுகு வோமாயின் கேவலஞ் ஜீவர்கட்கு வயிரியாகிய காலபாசத்தில் நின்றுந்தப்பித்து பரந்தாமனது பாதாரவிந்தங் களுக்காளாவோமன்றோ.
இதுகாறு மேன்மையைப் பயக்குவதாக விடாது நிகந்து வந்த நமது இச்சா ஞானக் கிரியைகளனைத்தும் அவலமாய்ப் போயிற்றே. எது நான் எதுநானெனத்தேடும் இவ்வெழுச்சியானது உதித்து மேலிட வில்லையே. மேலிட்டாலன்றோ, அவத்தாத்திரயங்களுக்கு விலட்சண முற்றிருத்தற்கியையும், அது இயைந்தாலன்றோ பிரவிர்த்தி நிவிர்த்தி யின்றி இருத்தற் கியையும் அங்ஙனமிருக்கினன்றோ சித்தம் நிலைத்தி ருத்தற் கியையும், அது நிலைத்தாலன்றோ பின்னீடு நாம் வெளிப்படு தற் கியையும், இதற்கு நாமென்ன செய்வோமென்றிடை விடாது அழுத கண்ணும் சிந்தையு முற்றிருத்தலாமென்க.

L. S. லெட்சுமண பிள்ளை,
வடசேரி.

சக்ரவர்த்தி திருநாள் வாழ்த்து.

(திருவனந்தபுரம் மகாராஜா மாதர் கலாசாலையில் சக்ரவர்த்தி திருநாள் கொண்டாட்டத்தன்று பாடப் பெற்றது.)

இளவரசாயிருந்த எழிலுறு காலந்தன்னில்
உளமிகஉவந்து யாதும் ஒப்பிலாப்பரதகண்ட
வளமெலாங்காண வந்தாயாயினும் பின்னும் வந்தே
ஒளிமிகுமுடியணிந்த உன்னையே ஒப்பார்யாரே! 1

ஒப்பிலா அரசர் ஏறே! உன் திருநாளாம் இன்று
செப்பரிதாமகிழ்ச்சி கொண்டுளோம் செங்கோல் தாங்கும்
அப்பனே ! அளவில்காலம் எங்களை ஆதரித்தே
இப்புவிதன்னில்வாழ்க இறைவனே ! ஐந்தாம் ஜார்ஜே ! 2

இறைவ ! நீ டெல்லிதன்னில் எழில் முடிசூடு நாளில்
மறையவர் முதலாயுள்ள வாணிடர் யாவருக்கும்
மறைபொருளெல்லாம்கல்விச் சாலையில் மாண்பதாகக்
குறைவறப் புகட்டவேண்டிக் குறைவிலாப் பொருளையீந்தாய் 3

ஈகையிற் கர்ணனையும் இணையிலாப் பொறுமைதன்னில்
மோகமில்லறன் மைந்தனையும் வழுவிலா மொழிகள்தம்மில்
ஓகையார் அரிச்சந்த்ரனையும் ஒக்கும் எஞ்சக்ரவர்த்தி !
வாகையோ டினிதுவாழ்க வாழ்கபல்லாண்டு மாதோ. 4

P. S. Ramaswamy Aiyar,
Tamil Pandit Girl's College,
TRIVANDRUM.

மனத்தின் தன்மை.

ஓர் பட்டணத்துக் கருகாமையிலுள்ள காட்டில் சோளப்பயிர்கள் நன்றாய்ச்செழித்து வளர்ந்து ஆள்மட்டத்துக்கு உயர்ந்திருந்தன. அவ்விடம் வெகுநாளாய் ஓர் புற்றுமுண்டு. அந்தப் புற்றைச்சுற்றிலும் சோளப் பயிர்களும் வளர்ந்து தலை நிமிர்ந்திருந்தன. இஃதிப்படிக்கிருக்க, அப்பட்டணத்து ராஜகுமாரன் அக்காட்டில் வேட்டையாடித் திரும்பி வருகையில், அச்சமயம் புற்றின்மீது தலை வைத்துப் படுத்திருந்த பாம்பும் இவனைத் தீண்டிற்று. இவன் போகும் அவசரத்தில் அதைக் கவனியாமல் சோளத்தட்டை காலில் உராய்ந்து இருக்கிறதென்று காலை யுதறிவிட்டுச் சென்றான். அதைப்பற்றி அவனது நினைவில் தாக்கவுமில்லை. இங்ஙனமாக மூன்று நாட்கள் கழிந்தன, நான்காம் நாள் அவ்விராஜ குமாரன் திரும்ப அவ்வழியே சென்றகாலையில் பழிகாரப்பாம்பு கண்ணெதிரில் படம் விரித்து நிற்பதைக் கண்டான். "ஆஹா! என்ன ஆச்சரியம்!! அன்று நாம் செல்லுகையில் சோளத்தட்டை உராய்ந்தது என்று நினைத்தோம், இரத்தம் கூட வந்ததன்றோ? இந்தப் பாழும் பாம்பன்றோ கடித்ததென்று" மனதில் உதித்தது. மயக்கம் ஏறியது. விழுந்தான் கீழே, வாயில் இரத்தம் கக்கியது. ஆள் பைசலானான்.

அந்தோ! பரிதாபம்! மனத்தின் தன்மை எவ்விதமிருக்கிறதென்பதைப் பாரத்தீர்களா! மனத்தின் தன்மையை விளக்கிக் காட்டும் சம்பவங்கள் இன்னுமநேக முண்டு. பட்டணத்து சிப்பாயொருவன் சண்டை நடந்து வருங்காலத்தில் தண்டு இறங்கியிருக்கும் டேராவைச் சுற்றிலும் பாராக் கொடுத்துக் கொண்டிருந்தான். மற்றும் அநேக சிப்பாய்களும் சுற்றிலும் பாராக் கொடுத்துக்கொண்டிருந்தனர். மணி 12 அடித்தது, நடு நிசி, நள்ளிருள், அப்போது வசந்தகாலமானதால் தென்றல் குளிர்ந்து வீசிக்கொண்டிருந்தது. இனிமையாய் வீசும் காற்றின் சுகத்தால் தன்னை மறந்து கையில் துப்பாக்கியுடன் நின்ற நிலையிலேயே தூங்கிவிட்டான். கைதனிலிருந்த துப்பாக்கியும் மெல்லெனக் கைநழுவிக் கீழ் விழுந்தது. பக்கத்தில் பெரிய பீரங்கி யொன்றும் கிடந்தது, பாராக் கொடுக்கும்போது சண்டை நடக்கும் ஸ்தலங்களில் தூங்கவும் கூடாது. கையில்

துப்பாக்கியின்றி இருத்தலுமாகாது. இங்ஙன மிருக்க, பாராவைப் பார்வையிடுவதற்காக மேலதிகாரி குதிரை மீதேறி வெகுவேகமாய் சப்தத்துடன் வரவே, சிப்பாய் விழித்து, தூக்க மயக்கத்தினாலும், திடீரென்று விழித்த கலக்கத்தாலும்; துப்பாக்கி கையிலில்லையென்பதுணர்ந்து, பக்கத்தில் கிடந்த நாலாள் தூக்கும்வலிமையுள்ள பீரங்கியைத் தூக்கிக்கொண்டு நின்றான். இதைப்பார்த்த கர்னல் துரை ஆச்சிரியமடைந்து ஒன்றும் பேசாமல் நின்றார். அவர் அந்தண்டை போனதே இவன் தன் கையிலுள்ளது துப்பாக்கி அல்லவென்றும், பீரங்கி யென்று முணர்ந்து நின்ற விடத்திலேயே போட்டுவிட்டான். அப்புறம் அதை அசைக்கக்கூட அவனால் இயலவில்லை. நாலாள் தூக்கும் பீரங்கியை இவன் ஒருவன் எப்படித் தூக்கினான். மனதின் திகிலினாலன்றோ? இங்ஙனமே தன்னால் முடியக்கூடாத காரியங்களும், அற்புதமான செயல்களும், மனத்தின் தன்மையால் சித்தித்திருக்கின்றன.

இந்தியாவின் அகோரமான உஷ்ணத்தினாலும், தன்னுடைய கஷ்டமான வேலையினாலும் அதிக இளைப்படைந்திருந்த ஓர் ஐரோப்பிய சிவில் உத்தியோகஸ்தன் தன் தேகஸ்திதியைப்பற்றி ஓர் டாக்டரிடம் தெரிவித்து அதற்குத் தகுந்த பரிகாரம் செய்யும்படியாகக் கேட்டான். அப்போது அந்த டாக்டர் அவனுடைய நுரையீரல், இரத்தாசயம் முதலியவைகளைச் சோதித்துவிட்டு, நாளைக்கு உனக்கு பதில் எழுதியனுப்புகிறேன் என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

அப்படியே அடுத்த நாள் அவ்வாலிபனுக்கு ஓர் கடிதம் கிடைத்தது. அதை அவன் திறந்து வாசித்தபோது அவனுடைய தேகமுழுவதும் நடுங்கினது. முகம் வெளுத்தது. எமதூதனே தனக்குப் பிடிவாரண்டு கொண்டு வந்திருப்பதாகநினைத்துக்கொண்டான். அதில் உன் நுரையீரல் முழுவதும் அழிந்துபோய் விட்டது. உன் இரத்தாசயத்திலும் பலத்த நோய் பிடித்திருக்கிறது. இன்னும் சில வாரங்கள் மட்டும் நீ ஜீவிப்பாய். அதற்குள்ளாக உன்னுடைய காரியாதிகளை ஒழுங்கு படுத்திக்கொள் என்று எழுதியிருந்தது. அக்கடிதம் கைவசம் வந்து சேர்ந்த 24 மணி நேரத்திற்குள்ளாக அவன் சுவாசம் விடச் சக்தியற்றுத் தன் இரத்தாசயத்தில் அதிக நோவிருப்பதாக உணர்ந்தான். உடனே தன்னுடைய படுக்கைக்குப் போய் அதிலிருந்து தான் ஒரு பொழுதும் எழுந்திருக்கப் போவதில்லை யென்று

நினைத்துக்கொண்டு அதில் படுத்தான். இராத்திரிக்குள்ளாக அவனுடைய தேகஸ்திதி அதிக கேவலமாகிவிட்டது. உடனே டாக்டரை அழைத்து வரும்படி அவனுடைய வேலைக்காரன் ஆளனுப்பினான்.

டாக்டரும் வந்து சேர்ந்தார். அவனைப் பார்த்தவுடன் டாக்டருக்கு திகிலுண்டானது. "என்ன! நீ உன்னை என்ன செய்துகொண்டாய்? நேற்று நான் உன்னைப் பார்த்தபோது இப்படிப்பட்ட குறிகள் ஒன்றும் உன்னிடத்தில் காணப்படவில்லையே" என்று அதிக ஆச்சரியத்துடன் கேட்டார். "என்னுடைய இரக்தாசயந்தான் அதற்குக்காரணம் என்று அதிக தளர்ந்த குரலுடன் வியாதிஸ்தன் சொன்னான். உன்னுடைய இரத்தாசயமா? நேற்று நான் சோதிக்கும்போது உன்னுடைய இரக்தாசயம் சரியான நிலையில்தானேயிருந்தது என்று டாக்டர் பரபரப்புடன் கேட்டார். அப்படியானால் என்னுடைய நுரையீரல் தான் என்று திரும்பவும் கேட்டான். உன்னுடைய நுரையீரலில் என்ன? நீ குடிகாரனாகக் காணப்படவில்லையே என்று டாக்டர் சொன்னார். அப்படியானால் நான் சிலவாரங்கள் மட்டுந்தான் உயிரோடிருப்பேன் என்று கடிதம் எழுதியிருந்தீரே என்று டாக்டரை நோக்கிக் கேட்டான். உனக்கு பைத்தியமா பிடித்திருக்கிறது? சிலவாரங்களுக்கு ரஜா எடுத்துக்கொண்டு மலைப் பிரதேசங்களில் வசித்துவர உனக்குப் பூரண சுக முண்டாகும் என்றுதானே எழுதியிருந்தேன் என்று டாக்டர் சொன்னார்.

அதைக்கேட்ட வியாதிஸ்தன் தன் மெத்தைக்கடியில் வைத்திருந்த கடிதத்தை எடுத்து டாக்டர் கையில் கொடுத்தான். அதைப் பார்த்தவுடனே டாக்டர் திகிலுடன், ஐயோ! பரிதாபம்! இக்கடிதம் இன்னொருவனுக்கு எழுதினது. அதை என்னுடைய வேலைக்காரன் கைப்பிசகாய் உனக்கு அனுப்பிவிட்டான் போலும் என்று சொன்னார். உடனே அவ்வாலிபன் தன் படுக்கையை விட்டு எழுந்து உட்கார்ந்து சீக்கிரம் சுகமடைந்தான்.

இவ்வாலிபனுக்காக எழுதப்பட்ட கடிதம் போய்ச் சேர்ந்த மரணப்படுக்கையிலிருந்த வியாதிஸ்தனோ உடனே ரஜா எடுத்துக்கொண்டு மலைப்பிரதேசங்களில் வசித்து ஐந்து வருஷங்களுக்குள் நன்றாய் சௌக்கியமடைந்து சுக ஜீவியாய் வாழ்ந்து வந்தான்.

மனத்தின்சக்திப் பிரயொகத்தினல் பலசாலியான ஒருமனிதனைத் துர்ப்பலமுள்ளவனாகவும், துர்ப்பலமுளானைப் பலிஷ்டனாகவும், ஆழ்ந்ததுக்கத்திலிருப்பவனை மிகக்களிப்புடையவனாகவும், களிப்புடையானை கவலையாளனாகவும், வியாதிகளை யகற்றவும், கெட்ட நடவடிக்கைகளை பற்றறத் தொலைக்கவும், இன்னும் எண்ணிறந்தவகையான நன்மையான காரியங்களை நடத்தவும் கூடும். (ஜனாநுகூலன்.)

ஒரு மகமதிய பீ. ஏ

இம்மாதம் 2–வ மாலை 5 மணிக்கு இவ்விடம் விக்ரோரியா சூபிலி டௌண் ஹாலில் மகம்மதியருடைய ஒரு பொதுக் கூட்டம் கூடிற்று. அப்பொழுது மாட்சிமை தங்கிய திவான் M. கிருஷ்ணன் நாயரவர்கள் அக்கிராசனம் வஹித்தார். இந்துக்களாகவும் கிறிஸ்தவர்களாகவும் அநேகர் விஜயம் செய்திருந்தார்கள். இவ்விடத்திலுள்ள மகமதிய கனவான்களெல்லாம் சேர்ந்து, தமது மரபிலிருந்து முதன் முதல் பி. ஏ. பரீட்சையில் தேர்ச்சியடைந்த ஸ்ரீமாந் மகமது சுலைமான் ஸாஹிப் அவர்களுக்கு, தங்கள் மதிப்பின் அறிகுறியாக, ஒரு தங்கப்பதக்கம் (Medal) கொடுக்க உத்தேசித்து அதற்காகவே இக்கூட்டத்தையும் கூட்டினார்கள். அக்கிராசனம் வகித்த திவான்ஜியவர்கள் ஸாஹிபவர்களுக்குத் தங்கப்பதக்கத்தை அளித்தார்கள்.

இந்தியா தேசத்துக்கு மகமதியர்களும் இந்துக்களும் இரண்டுகண்களுக்கு ஒப்பானவர்கள். ஜனத்தொகையிலும், செல்வப்பெருக்கிலும் செல்வாக்கிலும் இந்துக்களுக்கு மகமதியர்கள் சிறிதும் பின்னடைந்தவர்கள் அல்ல. பண்டைக் காலத்திலும் சமீபகாலத்திலும் அநேக தேசங்களை அரசாட்சிபுரிந்த பெருமையும் மகமதியர்களுடையதேயாம். இப்பொழுது ஆங்கிலேய அரசாட்சிக்குட்பட்ட சுதேச நாடுகளில் முதன்மை ஸ்தானம் பெற்றிருப்பது “ஐத்திராபாத்” என்னும் மகமதியநாடே. ஐத்திராபாத நவாபாகிய மாட்சிமை தங்கிய நைஜாம் மஹாராஜா அவர்கள், வயதிற் சிறியராயிருப்பினும், நவீன ராஜரீக முறையில் மிகவும் தேர்ச்சி யடைந்த நிபுணர். பட்டம்பெற்ற சொற்பக் காலத்துக்குள் ஐரோப்பியர்களும் வியப்படையும்வண்ணம்

தமது நாட்டில் அநேக சீர்திருத்தங்களை ஏற்படுத்தி தமது குடிகளை உயர்தர நிலைமைக்குக் கொண்டுவர முயற்சியெடுத்து வருகிறார்கள்.

மகமதியர்கள் இவ்வாறெல்லாம் பெருமையுடையவர்களாயிருந்தும் வித்யாப்பியாச விஷயத்தில் காலோசிதமான சீர்திருத்தமடைய விருப்பமில்லாதவர்களாயிருக்கிறார்கள். அறிவும் கல்வியும் யாவருக்கும பொதுவாயினவேயன்றி யாதேனுமொரு ஜாதியாருக்குத் தாயச் சொத்தல்ல. அதற்கு, தாழ்ந்த வருணத்தவர் என்று புறக்கணிக்கப் பட்டிருந்த அநேகர் உயர்தரக்கல்வியில் தேர்ச்சியடைந்து உயர்குலத்தாரென்று இறுமாந்திருந்தவர்களுக்கு ஒப்பான நிலைமையிலிருப்பதே போதுமான அத்தாட்சி.

ஆகவே மகமதியர்களும் மனம்வைத்துழைத்து, கல்விகற்கமுயல்வார்களானால் கல்வியறிவுடைய மற்ற ஜாதியாரைப்போல் உயர்தர நிலைமையை அடைவார்கள் என்பதற்கு சற்றும் ஐயமில்லை. வடஇந்தியாவில் அநேக மகமதியர்கள் இங்கிலாத்துக்குச் சென்று பற்பல உந்நதப் பரீட்சைகளில் தேர்ச்சியடைந்திருக்கிறார்கள். ஒரு மகமதிய கனவான் இராஜப்பிரதிநிதியின் "எக்ஸிகியூட்டிவ் கௌண்சிலிலும்" மெம்பர் ஸ்தானம் வகித்துவருகிறார்.

ஆகையால் நமது மகமது சுலைமான் ஸாஹிபவர்களை முன் மாதிரியாக வைத்து, மற்ற மகமதியசகோதரர்களும் கல்வி விஷயத்தில் கவனம் செலுத்துவார்களென்று நம்புகின்றோம்.

திருவிதாங்கோட்டு மகமதியருக்குள் முதல் பீ. ஏ. யாகிய மகமது சுலைமான் ஸாஹிபவர்கள், தென்திருவிதாங்கோட்டில் ஒரு முக்கிய மகமதிய வாசஸ்தலமாகிய திருவிதாங்கோட்டில், ஒரு பெருமையுள்ள குடும்பத்திற் பிறந்தவர், அவர்களுடைய தமயனார் ஸ்ரீமாந் இப்ராஹிம் பிள்ளையவர்கள் திருவனந்தபுரம் சாலையில் ஒரு பெயர் பெற்ற ஷாப்புமொத்த வியாபாரி. இப்ராஹிம் பிள்ளையவர்களுடைய முயற்சியினாலேயே நமது சுலைமான் ஸாஹிபவர்கள் இவ்வளவு பெருமையடைந்தது. நமது ஸாஹிபவர்களுக்கு நமது கவர்மெண்டார் ஒரு ஸப்ரெஜிஸ்திரார் உத்தியோகம் கொடுத்திருந்தாலும் அதோடு திருப்தியடையாமல், இரண்டு வருஷம் ரஜா எடுத்துக்கொண்டு பீ. எல். பரீட்சைக்கு வாசிக்கப்போவதாக அறிந்து மிக சந்தோஷிக்கிறோம்.

ஸாஹிபவர்கள் பீ. எல் பரீட்சையிலும் தேர்ச்சியடைந்து உயர் தர உத்தியோகமும் பெற்று, தனது சமுதாயத்துக்கு ஒரு திலகம் போல் விளங்குமாறு சர்வ வல்லவராகிய கடவுள் அருள் புரிவாராக

பத்திராதிபர்.

மதிப்புரைகள்.

அகமே புறம்:—இந்நூல் ஸ்ரீ ஜேம்ஸ் ஆலன் என்னும் ஆங்கிலத் தத்துவ சாஸ்திரி இயற்றியுள்ள "அகத்திலிருந்து புறம்" என்று பொருள் படும் ஆங்கில நூலின் "உயர்தர வாழ்வு" என்னும் பகுதியின் மொழி பெயர்ப்பு. ஸ்ரீ ஜேம்ஸ் ஆலனது இறகுப் பிறப்பான நூல்களை வாசித்தோரெல்லாம் அப்பெருமதியாளனை "மேனாட்டுக் கௌதமர்" என்று வியந்து வணங்குகின்றனர் என்றால் அவரது நூலின் சிறப்பை விரித்துரைக்கவும் வேண்டுமா?

எவ்வளவு பெருமையுடைய நூலும் பிறிதோர் பாஷையில் மொழி பெயர்க்கப்படும் பொழுது மூலநல மிழந்து சிற்றலே பெரு வழக்கம். மொழி பெயர்க்கத் துணிவோர் இருமொழியிலும் வல்லுநராயிருத்தலோடு முதனூலாசிரியரின் கருத்துக்களை உள்ளபடி உணரும் ஆற்றலுடையோராயும் இருத்தல் வேண்டும். இன்றேல் The wind blows என்ற ஆங்கில வாக்கியத்தை, காற்று ஊதுகிறது என்று மொழிபெயர்த்த மதிமான் கதையாகவே முடியும்.

நமது "அகமே புறம்" என்னும் இந்நூலோ மொழி பெயர்ப்பாளராகிய ஸ்ரீமாந் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் கைந்நலத்தால் முதனூலிலும் சிறந்து விளங்குகின்றதென ஐயமறக் கூறலாம். ஸ்ரீமாந் பிள்ளையவர்கள் தமிழுலகத்திற்குப் புதியரல்லர். ஆங்கிலத்திலும் தமிழிலிலும் அவர்கள் அடைந்துள்ள பாண்டித்தியத்தை அளவிட்டறிதற்கு இந்நூலே ஒரு சிறந்த அளவுகோலாம்.

முதனூலின் ஆழ்ந்த கருத்துக்களை சிறுவர் சிறுமியரும் எளிதிலுணர்ந்து கொள்ளத்தக்க எளிய தெள்ளிய செந்தமிழ் நடையில் விளக்குவித்த பிள்ளையவர்கள் திறமை யாவராலும் பெரிது மதிக்கற்

பாலதேயாம். இவ்வரிய நூலைத் தமிழ் மக்களாவார் ஒவ்வொருவரும் வாங்கிப்படித்துப் பயனுணர்வார்களாயின், தமிழுலகெங்கும் அறமுகில்பரந்து, அன்புமழை பெய்து இன்பப்பயிர் செழிக்குமென்பதற்கு எட்டுணையும் ஐயமின்று. உயர்ந்த சுதேசிய நயம் கடிதத்தில் அச்சியற்றப்பெற்ற இவ்வழகிய நூலின் விலை அணா எட்டேயாம்.

வேண்டுவோர், சென்னை மைலாப்பூரில் ஆசிரியருக்காவது, தமிழன் ஆபீசுக்காவது எழுதி வி. பி. மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

புனர் விவாக போதம்.

இஃது திருநாகேச்சுரம், ஸ்ரீமாந் வரகவி ந. பாக்ஷா ஸாஹிபவர்கள் இயற்றிய ஒரு சிறு நூல். இந்நூல் அளவிற் சிறிதேயன்றி விழுமிய பொருளமைதியிற் பெரிதேயாம். நமது தற்கால நிலைமைக்குப்புனர் விவாகம் இன்றியமையாததென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கிக் காட்டியிருப்பதோடு இவ்வழக்கமில்லாமையால் இந்திய சமுதாயம் படும் பாட்டையும் விரித்தெழுதியுள்ளார்.

இதன் விலை அணா 4.

சமாசாரத்திரட்டு.

சிறுவர்களுக்கு ஒரு கோர்ட்டு:—வங்காள கவர்ண் மெண்டார் சட்ட விரோதமாய் குற்றம் செய்த சிறுவர்கள் 15 வயதுக்குட்பட்டவர்களாயிருந்தார்களானல் அச்சிறுவர்களை அடைத்து வைக்க ஒரு தனியான வீடும், அவர்கள் செய்த குற்றங்களை விசாரித்துஅவர்களைத் தண்டிக்க ஒரு தனியான கோர்ட்டும், ஜூன் மாதம் முதல் ஸ்தாபிப்பதாய் நிச்சயம் செய்திருக்கிறார்கள். இதற்கு ஒரு கம்மிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள். அக்கமிட்டியில் ஜட்ஜ் முக்கர்ஜியின் மனைவி ஒரு மெம்பர்.

குழந்தைகள்;—இவ்வுலகத்தில் வருஷமொன்றுக்கு சுமார் 3,60,00,000 குழந்தைகள் பிறக்கின்றனவாம். அஃதாவது நிமிஷம் ஒன்றுக்கு 70 குழந்தைகளும் ஸெக்கண்டு ஒன்றுக்கு 1குழந்தைக்கு

அதிகமாகவும் பிறக்கின்றனவாம். ஒரு வருஷக்குழந்தைகளை ஒரே வரிசையில் தொட்டில்களில் அமைத்துவைத்தால் அத்தொட்டில்கள் இப்பூமண்டலம் முழுமையும் சுற்றியிருக்குமாம்.

பைத்தியம் பிடித்த நாய் விஷத்துக்கு முறிவு:--மணத்தக்காளித்தழையை இடித்து ரஸம்பிழிந்து சல்லாத்துணியில் ஏழுதடவை வடிக்கட்டி ஒரு நாளைக்கு அரைக்கால்படி ரஸம் வீதம் மூன்று நாள் குடிக்கவேண்டும். ஆறு நாள் உப்பில்லாப் பத்தியம் இருந்து கஞ்சி சாப்பிடவும். ஏழாவது நாள் ஓமத்தை அரைத்து வெந்நீர் ஸ்நானம் செய்து ஆறுவாரம் நல்லெண்ணெய் சேர்க்காமல் ஸாதாரண ஆகாரம் புசித்துவந்தால் விஷத்தின் விகாரங்கள் போய்விடும்.

மலேரியாவும் கொசுக்களும்:-- விஷ ஜுரத்திற்குக் காரணம் கொசுக்கள். நீர் தங்கியிருக்கும் குட்டை குளங்களின் ஓரங்களில் கொசுக்கள் முட்டையிடுகின்றன. அலைகளினால் கொசுமுட்டைகள் நடுஜலத்திற்கு கொண்டுபோகப் படுகின்றன. சில மீன்கள் அம்முட்டைகளைத் தின்று ஜீவிக்கின்றன. கொசு இருக்கும் குளம் குட்டைகளில் இவ்வகையான மீன்களைப்பிடித்து வளர்த்து வந்தால் கொசு உற்பத்தி யாகாது. அப்பொழுது விஷஜுரமுண்டாகாது. பம்பாயிலிருக்கும் போல் தொழிற் சாலையில் மிஸ்டர் க்ளென்லிஸ்டன் என்பார் கொசுக்கூட்டங்களைத் தொலைக்க அநேகவகை மீன்களைப்பிடித்து வளர்த்து வருகிறார்.

சோளத்தின் உபயோகம்:---கிரேவிடும் அமெரிக்காவிலும் மக்காச்சோளககதிரில் தொங்கும் பட்டுநூல் குஞ்சம் போன்ற வஸ்துவைக் கஷாயம் வைத்துக் கொடுத்தால் நீரடைப்பு; நீர்சுருக்கு, முதலான வியாதிகள் குணமாவதாகச் சொல்லுகிறார்கள். மக்காச்சோளக் கதிரில் உள்ள தானியத்தை உதிர்த்த பின்னுள்ள கத்தையை எரித்த சாம்பலுடன் ஸாதாரணமாக உப்புக் கலந்து கொடுத்தால் நெஞ்சுச் சளியும், அதனாலுண்டான கக்குவான் என்னும் இருமலும் குணமாகிறதாம்.

கறையானைத்தொலைக்க மருந்து:---நன்றாய்க் கொதிக்கும் வெந்நீரிலே சீனக்காரத்தைக் கரைத்துப் பொங்கிலூற்றிவிடக் கறையான் நாசமாகுமாம் பொட்டுப்பூச்சி வலை நெய்யுமிடங்களில் இதை யூற்றிவிட்டாலும் அது பயந்து ஓடிவிடுமாம்.

இவ்வருஷத்திய பீ. எல். பரீட்சையில் திருவிதாங்கோட்டு வேளாளர்களில்இருவர் ஜெயம் பெற்றிருப்பது மிகவும் சிலாக்கியமானதே. ஒருவர் நாகர்கோவிலுக் கருகாமையிலுள்ள சிவஞானபுர வாசியான ஸ்ரீமாந் கோலப்ப பிள்ளையவர்கள். மற்றவர் திருவனந்தபுரம் சாலையில் மொத்த வியாபாரமாயிருந்து காலஞ்சென்ற ஸ்ரீமாந் வடிவீஸ்வரம் பழனியாபிள்ளையவர்கள் புத்திரர் ஸ்ரீமாந் சிதம்பரம் பிள்ளையவர்கள். இவர்களுள் முதலவராகிய ஸ்ரீமாந் கோலப்ப பிள்ளையவர்கள் இரண்டாவது வகுப்பில் தேறியிருப்பது மிக மதிக்கற்பாலதே. அவர்கள் பீ. ஏ யிலும் இரண்டாவது வகுப்பிற்றான் தேறினார்கள். அவர்களுக்கு இப்பொழுது பத்மநாமபுரம் டிவிஷன் கச்சேரியில் ஏதோ ஒரு சிறு உத்தியோகம் உள்ளதாக அறிகிறோம். ஸ்ரீமாந் சிதம்பரம் பிள்ளையவர்கள் இதுகாறும் ஒரு உத்தியோகத்திலும் பிரவேசிக்கவில்லை. அவர்கள் வக்கீலாக வியவகரிக்கப்போவதாகவும் அறிகிறோம். திருவிதாங்கோட்டில் வேளாளர் ஒரு முக்கிய சமுதாயத்தாராயிருந்தும் அவர்களுக்குள் ஒரு ஐக்கோர்ட்டு வக்கிலாவது இல்லாமலிருப்பது அந்த சமுதாயத்துக்கு ஒரு பெரும் வசைமொழியேயாம். ஆகையால் இவ்விருவரும் வக்கீல்களாக முயலவேண்டுமென்பதே எமது விருப்பம்.

கப்பலிற்களவு:—சென்னைத் துறைமுகத்துக்கு வந்திருந்த தீஸ்டர் என்னும் கப்பலிலே வேலைக்காரரிருவர் ஒரு புடவைச் சிப்பத்தை வெட்டி ஒரு சிலையெத் திருடினதற்காக ஆறாறுமாசக் கடுஞ்சிறையடைந்தனர். இது நம்மூர்த்திருடருக்கும் நற்பாடமாயிருக்கட்டும்.

(அரையணா லஞ்சம் வாங்கிய போலீஸ்:—திருவொற்றியூரில் ஓர் வண்டிக்காரனிடம் அரையணாக்கைக்கூலி வாங்கிய போலீஸ்காரனுக்கு மூன்று மாதம் கடுஞ்சிறை விதிக்கப்பட்டது. ஆயிரம் வாங்கினவர்களும் அசையாமயிருக்கிறார்களே !)

மெய்யறம்.

இந்நூல் ஸ்ரீமாந் "வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள்" கண்ணனூர்ச் சிறையரணில் வசித்த காலத்தில் இயற்றிய தமிழ்ச் செய்யுள் நூல்களில் ஒன்று. இது திருவள்ளுவர் திருக்குறளுக்கு வழிநூல். திருவள்ளுவர் திருக்குறளிற் கூறியுள்ள பொருள்களில் நமது நாட்டின் தற்கால நிலைமைகளுக்குப் பொருத்தமாகச் சிலவற்றைத் தொகு

த்தும் சிலவற்றை விரித்தும் இது கூறுகின்றது. ஔவையாரது கொன்றைவேந்தன் சூத்திரத்தைப் போன்ற ஒவ்வோர் அடிச்சூத்திரத்தால் இது இயற்றப்பட்டுள்ளது. இது "மாணவவியல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணவியல், மெய்யியல் என்னும் ஐந்து இயல்களாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. "மாணவவியல்" முப்பது அதிகாரங்களையும், "இல்வாழ்வியல்" முப்பது அதிகாரங்களையும், "அரசியல்" ஐம்பது அதிகாரங்களையும், "அந்தணவியல்" பத்து அதிகாரங்களையும், "மெய்யியல்" ஐந்து அதிகாரங்களையும், ஒவ்வோர் அதிகாரமும் பப்பத்துச் சூத்திரங்களையும் கொண்டுள்ளன. நூலின் பொருள்களைப் பள்ளிச்சிறாரும் தெள்ளிதில் உணருமாறு சூத்திரங்கள் இனிய செந்தமிழ் நடையில் ஆக்கப்பட்டுள்ளன. நூலில் ஏகதேசமாகக் காணப்படும் அரும் பதங்களுக்கு உரைகள் நூலின் முடிவிற் சேர்க்கப்பட்டுள்ளன. திருக்குறளுக்குப் பின்னர் இது காறும் இத்தகைய தமிழ் நூல் வெளி வந்திலது. திருக்குறளைக்கற்க விரும்புவோர்க்கு இந்நூல் ஓர் உரை ஆசிரியர் போன்று வள்ளுவர் கருத்துக்களைப் பொள்ளென விளக்கும். திருக்குறளைக் கற்றுள்ள பண்டிதர்களுக்கும் இந்நூல் பல புதிய பொருள்களைத் தெரிவிக்கும். இவ்விரு திறத்தார்க்கும் இந்நூல் துணையாகுமென்றால் ஏனையோர்களுக்கு இந்நூல் எவ்வளவு பயன்படுமென்பது சொல்லாமலே விளங்கத்தக்கது. இந்நூற் பொருள்களின் அருமையும் பெருமையும் அவற்றைக் கூறியுள்ள திறமைப்பாடும் இந்நூலை ஒரு முறை பார்த்த மாத்திரத்தில் விளங்கும். தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இந்நூலைக் கைக்கொண்டு கற்கவேண்டுவது அத்தியாவசிகம் இது டபிள் கிரௌன் 16 பக்கங்களுள்ள ஆறு பாரங்கள் கொண்டுள்ளது.

இதன் விலை அணா 8. போஸ்டேஜ் வி. பி. சார்ஜ் அணா 2.

மனம் போல வாழ்வு விலை அணா 8.

அகமே புறம் விலை அணா 8.

இப்புத்தகங்கள் வேண்டுவோர் இதனடியிற் கண்ட விலாசங்களில் ஒன்றற்கு எழுதித் தருவித்துக் கொள்ளலாம்:—

1. வ. உ. சிதம்பரம் பிள்ளை, மயிலாப்பூர், மதுராஸ்.

2. பத்திராதிபர், தமிழன், திருவனந்தபுரம்.

இனிய தமிழ் நாவல்கள்.

மதவிருக்ஷம்	1	12	விரும்பியவிதமே	0	12
இந்து பைபில்	1	12	வாணீபுரவணிகன்	0	12
விஜய சுந்தரம்	1	8	பிரேமகாந்தன்	0	12
ஞானம்பிகை	1	4	ஐவன்ஹோ	0	12
ஞான சம்பந்தன்	1	0	இந்திரஜித்தன்	0	12
அயாஷா	1	8	சத்ருஜித்	0	12
கன்னிமுத்தம்	1	8	கண்ணகி	0	12
வரத்சுந்தரம்	1	0	பானுமதி	0	12
நாலடியார்	1	2	லீலாவதி	0	10
மதன காந்தி	1	0	பத்மநாபன்	0	10
வசிகரி	1	0	புருஷோத்தமன்	0	10
ஜயசீலன்	1	0	சத்யசீலன்	0	10
காளிதாசர் சரிதை	1	0	பத்மாசனி	0	10
சங்கரவிஜயம்	1	0	குலசேகரன்	0	10
மதுரைக்கரசி	1	0	தேவிசந்திரப்பிரபா	0	10
ஞானத்திரட்டு	1	0	மாலிகா பூஷணி	0	10
அந்தப்புர ரகசியம்	0	14	பட்டணத்தார்	1	0
ராஜாம்பாள்	0	12	தாயுமானவர்	1	0
சந்திரகாந்தா	0	12	பக்தலீலாமிருதம்	3	0
மோகன சுந்தரம்	0	12	கல்லாடம்	3	0
அனுமான்சிங்	0	12	பக்தவிஜயம்	3	0
மீனாக்ஷி	1	0	மனோரஞ்சிதம்	1	0
லீலா	0	12	நாரதர் கலகம்	1	8
சபலை	0	8	ஒட்டக்கூத்தர்	1	0
ஆனந்தகிருஷ்ணன்	0	12	வெண்டாமரையாள்	1	0
தாமோதரன்	0	12	சந்த்ரோதயம்	1	0
பனங்குளம்	0	12	சுந்தரிமனோகரன்	0	12
ஞானகாந்தி	0	12	துர்க்கேசநந்தினி	1	0
பத்மலோசனி	0	12	மதிகெட்டமனைவி	1	0
ஆனந்தசுந்தரி	0	12	பிரேமகாந்தன்	0	12
சத்தியவல்லி	0	12	அத்யாத்மராமாயணம்		
சுமுகன்	0	12	காலிக்பயிண்டு கிலிட்	2	8
லீலாவதி சுலோசனா	0	12	விஜய காருண்யம்	0	12
பிரேமகலாவதியம்	0	12	அமீர்லிங்	0	12
மனோகரன்	0	12	புஷ்பவனம்	0	10
கள்வர் தலைவன்	0	12	சாரதாம்பாள்	0	8
இரண்டு நண்பர்கள்	0	12	வத்ஸலா	0	8
லலிதாங்கி	0	8	சாரங்கதரன்	0	8

எஸ.ஜி.ஐயர் அண்டு கம்பெனி,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

சில்லறை நோய்கட்கு.

வைத்தியரைத் தேடவேண்டாம்.

நீலகிரியூக்லிபிடஸ் ஆயிலை உபயோகப்படுத்துங்கள்.

மேற்படி தயிலமானது தீர்க்கும் வியாதிகள் 22. கத்திவெட்டுக்காயங்கள், நரம்புச் சுளுக்குகள், தீ அல்லது வெந்நீரால் உண்டாகிற புண்கள் தொத்துகுறைமுறை வியாதிகள், தொண்டைநோய், மார்சளி, இருமல் கைகால் பிடிப்பு, ஜலதோஷம், சுரம், ஒற்றைத்தலைநோய் எப்பேர்ப்பட்ட மண்டைகுத்தலையும் தீர்க்கும். மாதிரிக்கு ஒரு புட்டி வாங்கி உபயோகப்படுத்தினால் உண்மையறியலாம்.

1	அவுன்ஸ்	புட்டி	விலை —4—0
1	டசன்	புட்டி	... 2—8—0
24	அவுன்சு கொண்ட	புட்டி ஒன்று	... 4—0—0

பி. தர்மா அண்டு கம்பேனி,
சிந்தாதிரிப்பேட்
மதிராஸ். S. C.

வெண்குஷ்டம் தீர்க்கும் விசேஷமான மருந்து.

மூன்று முறை உபயோகித்தால் வெள்ளை நிறம் மங்கிவிடும். 41–நாள் உபயோகித்தால் பூர்ணசுகம் உண்டாகும். சொஸ்தமாகாவிட்டால் மருந்தின் விலையை திரும்பக்கொடுக்கப்படும். டப்பி ஒன்றுக்கு விலை ரூ 3—0—0 வேண்டுவோர் கீழ் காணும் விலாசத்துக்கு இங்கிலீஷில் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

Vaidyaraj Mahabar Pattack
Darbhanga.

The Popular Scientific Journal.

This monthly journal is very interesting reading to all who can understand English. The *wonders*, *discoverie* *beauties* of *nature* and *science*, *Health Questions*, etc. are explained month by month. *All parents who are interested in the right education of their children should at any cost get regularly a copy and see that they read and understand it.* What a store of valuable, instructive, and interesting information! All only for Rr 2/- a year!! Write to-day and subscribe for the ournal, and you will he a gaver.

P. S. J. Office, 2/98. Broadway, Madras.

World Renowned Atank Nigrah Pills.

உலகபிரசித்தி பெற்ற

ஆதங்கநிக்ரக மாத்திரைகள்

நோயற்ற வாழ்வே வாழ்வு!

அவ்வாழ்வுக்கு

ஒரேரூபாய் தான் செலவு

எங்கள் ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளைப் போல் பூர்ணசுகத்தையும் அழிவடையா பலத்தையும் மனோஹரமான அழகையும் கொடுக்கும் மருந்து வேறு இல்லவே இல்லை. இரத்தசுத்தி செய்யவும் அதுவே நல்ல ஔஷதம்.

32. மாத்திரைகள் அடங்கிய டப்பி 1-க்கு ரூபாய் ஒன்றே, வேண்டுவோர் கீழேகாணும் விலாசத்தாருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

வைத்தியசாஸதிரி மணிசங்கர்கோவிந்தஜி

22. பிராட்வே,

மதிராஸ்.

கே. எஸ். முத்தப்பா அண்டு கம்பேனி ஸ்ரீகாசி.

மஹாராஜாக்களாலும் ராஜாக்களாலும் ஜமீன்தார்களாலும் பிரபுக்களாலும் நன்கு மதிக்கப்பெற்றவர்கள். பல தேசங்களில் நடந்த முக்கிய பொருட்காட்சிகளில் அனேக பொன், வெள்ளி பதக்கம் பெற்றவர்கள்.

பட்டு தினுசுகளில் கைகுட்டை முதல் மஹாராணிகள் அணிந்துகொள்ளும் முகூர்த்தப் பட்டாடைகள்வரை சப்ளை செய்யச்சித்தமுள்ளவர்கள்.

அனேக நூதன கலர்களில் நவீனமுள்ள புடவைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், தாவணிகள், தலைக்குட்டைகள், பஸ்கானு வேஷ்டிகள், வெண்பட்டு வேஷ்டிகள், சோமன்ஜோடிகள் முதலிய தினுசுகள் எக்காலத்திலும் தயாரில் வைத்திருக்கிறவர்கள்.

நீங்கள் கொடுக்கும் பணத்துக்குச் சரியான நாணயமுள்ள தினுசுகளாக சப்ளை செய்யக்கூடியவர்கள். நீங்கள் வழக்கமாய் கொடுத்து வாங்கிவந்த விலைகளையும் இவர்களுடைய விலைகளையும் சடுதி பார்ப்பீர்களாகில் இவர்களுடைய விலையும் தினுசுகளும் தங்களுக்கு எம்மாதிரியான திருப்தியைக் கொடுக்கும் என்று தாங்களே அறிந்து கொள்வீர்கள்.

இவர்களிடம் ருத்திராக்ஷங்கள், கஸ்தூரி, பால்காயம் குங்குமப்பூ முதலிய கலப்பற்ற சுயமான தினுசுகளும் இருக்கின்றன.

Famous Woollen Shawls.

சுத்தமான "கம்பளி போர்வை"கள், சரீரசுகத்தை பாதுகாக்கும் சக்தி நிறைந்துள்ளது, மிருதுவும், அழகும் வாய்ந்தது, பனி, குளிர், வாடைகாலங்களில் மிகவும் உபயோகமுள்ளதோடுகூட வெப்பத்தைக் கொடுத்து உற்சாகத்தை உண்டுபண்ணக்கூடிய சக்திநிறைந்துள்ளது, பார்வைக்கு அழகான பல கலர்களிலுமிருக்கின்றன.

6 முழம் நீளம் 3 முழம் அகலம் விலைரு. 4-8-0 முதல் 5-8-0 வரை

மேகவர்ணப் போர்வை.

இதுவும் கம்பளி போர்வையே. இதன் நிசவு, பரவு சிகப்பு கலரும், ஊடு பச்சை கலரும் சேர்ந்தது. பளபளப்பும், அழகும், மிருதுவுமுள்ளது. "மேகவர்ண" கலர்மாத்திரந்தான் உண்டு.

6 முழம் நீளம் 3 முழ அகலம் ரூபா 6-8-0

பெரிய கேட்லாக்கு இனாமாக அனுப்பப்படும்.

எங்கள்ஜெனரல் கேட்லாக்கை தருவித்து பாருங்கள். இனாமாக அனுப்பப்படும்.

K. S. Muthiah and Co.,

Benares City.

"Bhaskara" Press,

TRIANDRUM.

Estd. 1889, A. D.

The only Printing and Publishing House,
where good printings of every description can be had in
English, Malayalam, Tamil & Sanskrit.

Book and job works of all descriptions,
in the above languages are executed here with,
Neatness, accuracy and despatch.

**Programmes, letter and bill heads,
Plantation Check Rolls and Muster Rolls,
estate forms etc. etc. etc.**

Printed at short notice and at a Cheap Rate.

A Trial order solicited.

Apply to,

N. Padmanabha Iyengar,

Manager.

கவிடாதீர்கள் ஏமாறுதேயுங்கள்

சர்வதேள்விஷசஞ்சீவி.



கதறிவந்தவன் களிப்புடன்செல்வான்

விஷந்திண்டினவன்

நிமிஷத்திற் குணமடைவான்

குணமில்லாவிடில் ரூ 100 இனும்.



நண்பர்களே ! ஒவ்வொரு

வீட்டிலும் தேளினுடைய உபத்தி வரம் பொறுக்கமுடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுற நேரிடுவதைப் பற்றி, யாம் அதிக கஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்டுபிடித்து, அனேக ஐரோப்பிய டாக்டர்களாலும் தமிழ் வைத்திய பண்டிதர்களாலும் கண்டு மதிக்கப் பட்ட எமது ஷி கண்டலங்கர் மார்க்குள்ள சர்வ தேள்விஷ சஞ்சீவி யை தேள் கொட்டின இடத்தில் உபயோகிக்க உடனே 1-2 நிமிஷத் துக்குள் குணமடையச் செய்யும். இவ் விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய், பூரான், செய்யான், பாம்பு, நண்டுத்தெறக்கால் முதலிய எவ்வித விஷ ஜந்துக்கள் தீண்டினபோதிலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குணமடையலாம்.

மேற் சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்துவிடப்படும்.

இந்த லங்கர் மார்க்குள்ள சர்வ தேள்விஷ சஞ்சீவியைக் கைப் பற்றுங்கள். இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம்இருக் கவேண்டிய கடமை. ஏனென்றால், ஓர் மனிதனை இரவில் 12 மணிக்கு நித்திரையில் விஷந் தீண்டிவிட்டால் அம் மனிதன் யெவ்வளவோ அவஸ்தைப்பட்டு அனேக மருந்துகளும் மந்திரங்களும் உபயோகித் தும் பயன்படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ்விஷசஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

வேண்டுபவர்கள் அடியிற் கண்ட விலாசத்துக்கு யெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

	விலை பாக்கெட்	1-க்கு	0—8—0
தபால் சார்ஜ் பிரத்தியேகம்.	டசன்	1-க்கு	5—0—0

வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும். எவ்வி டத்திலேனும் ஏஜெண்டுகள் தேவை. மேல்விலாசம்.

வி. எ. எஸ். பாணி அண்டு கோ,

நெ 3 இருளப்பன் தெருவு மதிராஸ.

THE COMPLETE LETTER WRITER

4th Edition Revised and Enlarged by

HARI CHARAN DAS

Price Re. 1. (*full cloth gilt 320 pages.*)

An universal Guide to the Art of letter writing for all positions of life, It contains 24 Chapters Private Correspondence, News Papers Doctors. School Correspondence, Government and Commercial, Collectors Office. Attorneys Vakils and Muktears. Steamers, Police, Municipality, Incometax. Railways, Tramways, Medical Department, Posta Department, Telegraph Department, precis Writing, Drafting Docketing Book keeping, Miscellaneous forms Miscellaneous Application forms, Forms of Address paper Current. Abberviations and Daily wages.

MATRICULATION ESSAY by Hari Charan Das. Very useful book School Boys. Price As. 8.

ENGLISH ETIQUETTE & ENGLISH PROVERBS.

A very useful book for those who come in contact with Englishmen Price As. 5. only.

CHILD'S EASY CONVERSATION, 2nd Ed.

If you want to speak in English fluently you should buy the above book, it will teach both you and your children to speak in English within two or three months. Price As. 10 only

M. L. Das & Co, BOOK-SELLERS & PUBLISHERS.

122, Baitakhana Road Calcutta,

The Northern Sircars Life Assurance Co, Ltd,

27, Dharamtala Street.

CALCUTTA.

ESTABLISHED 1903.

Possesses Govt. Security.

Affords Life & Marriage assurance facilities to its subscribers,

MONTHLY PREMIUMS.

Life Branch	**First Class**	**Rs 1**
	Second Class	**Re ½**
Marriage		**Re I**

For pospectus, application forms etc, apply to

THE MANAGER

The "**Tamilian**"

Trivandrum.

ரசாயன அரண்மனையில் செய்த.

கைகண்ட அபூர்வ மருந்துகள்.

ஹரிதாசர் வெள்ளி யெண்ணெய். (கைகண்டது)

சகல விதமான கரே மேகம சபந்தமான வியாதி; கண்டமாலை, ஆருதரணங்கள், அசுத்த ரத்தம், மேகநீர், படை, கட்டி. பிளவை, நீரிழிவு, நாள்பட்ட சொறி முதலியவைகள் அடியோடே நீங்கும். அசல் வெள்ளியிலும் மூலிகைகளிலுமே ஹரிதாசருடைய முறையின்படி செய்யப்பட்டது; மிகவும் கைகண்டது:—விலை ரூ 2–8.

ஹரிதாசர் காலரா துளி (கைகண்டது)

வாந்திபேதிக்கும், சசல பேதி, வயிற்றுவலி அஜீரண சம்பந்தமான வியாதிகளுக்கும கைகண்ட உப்புத்துளி மருந்து. இம்மருந்தை யுபயோகித்ததில் ஒரு காலரா கேஸாவது மரணமாக முடியவில்லை. புட்டி விலை 1-க்கு ரூ 1-4-0

ஹரிதாசர் ஹெர்பல் பெயின் பாம் (கைகண்டது.)

இதைவிட கைகண்ட மேல் பூச்சு மருந்து எங்கும் கிடையா தென்று வாங்கி உபயோகித்தவர்கள் எல்லாரும் சொல்லுகிறார்கள். தலைவலி, கால் கை வலி, முழங்கால் வலி. மார்புவலி, பாரிசவாய்வு, முதலிய எவ்விதமான உடம்புவலியும் சீக்கிரத்தில் நீங்கும். ஒவ்வோரு வீட்டிலும், எப்பொழுதும் இம்மருந்து ஒன்று இருக்கவேண்டியது. விலை அணா 10.

ஹரிதாசர் என்னைத்தைலம் (ஸ்நான தைலம்)

மேகச்சூடு தணியும், மேகவியாதி குறையும்; ஞாபகசக்தியுண்டாகும். சகல விதமான கண் வியாதிகள் நீங்கும். குளிர்ச்சியையும். சுத்தத்தையும் தரும் முடியையும் வளர்க்கும். யாவரும். எப்பொழுதும் உபயோகிக்கலாம். ஐயா, தேவதாஸ்பிள்ளை பி. ஏ. அவர்களுக்கு எழுதுவது:—உங்களுடைய என்னைத் தைலம் மூன்று ஸ்நானம் செய்ததில். மங்கலாயிருந்த என் இடது கண், வலது கண்ணைப்போல் தெளிவாகி விட்டது. இதை சந்தோஷத்துடன் அறிக்கையிடுகிறேன்.—இப்படிக்கு தங்கசாமிபிள்ளை, ஹெட்மாஸ்டர் கவர்ன் மென்ட் டிரெயினிங்ஸ்கூல், பெங்களூர்.

அறிக்கை:—இன்னும் பல விதமான ஸ்நான தைலங்கள் உண்டு. தைலம் வேண்டுவோர் வியாதியின் குறிப்பைத் தெளிவாக எழுதினால் தகுந்ததைலம் அனுப்பப்படும், ஸ்நான தைலங்கள் எல்லாம் (4 அவுன்ஸ்) புட்டி 1-க்கு ரூபா 1.

ஹரிதாசர் அமிர்தபில்லை (கர்ப்பஸ்திரிகளுக்கு)

இது 5 வீதம். கெர்ப்பிணிகளுக்குண்டாகும் சகல விதமான துன்பத்தையும் வியாதியையும் நீக்கும். பிரசவகாலத்தில் சுலபமானபிரசவமாகும், விபரம் தெளிவாய் எழுதி தகுந்தநம்பர் பில்லைகள் பெற்றுக்கொள்ளவும். 30 பில்லை ரூபா I.

வியாதியைப் பற்றித் தெளிவாய் எழுதினால் தகுந்த மருந்தும் விலையும் தெரிவிக்கப்படும். பதில் கடிதத்துக்கு ஸ்டாம்பும், மேல் விலாசம் தெளிவாய் எழுதியும் அனுப்பவேண்டியது. இங்கிலீஷில் எழுதினால் நல்லது.

H. தேவதாஸ் பிள்ளை. பி. ஏ.

மானேஜர். ராசாயன அரண்மனை,

2/98 பிராட்வே, மதராஸ்

A GLORIOUS GROWTH OF HAIR.

Glorious because a thing of beauty and joy, not for sometime but for a life time. A long luxuriant growth of hair is glorious to behold and still more glorious to possess. The care of your hair will become less of a care and worry if you use

KAMINIA OIL

(REG.)

A hair-dressing and a hair-tonic of exceptional merit because it is made from ingredients that are scientifically compounded. Cleans the scalp, feeds the pores, renews life and revives partly dead hair. It cools the brain and sheds a charming fragrance around you.

Price Re. 1/-per bottle, V. P. P. As. 4 extra.

,, Rs. 2-10 per 3 bottles, V. P. P. As. 7 extra.

Send half-anna Stamp for sample bottle and test it for yourself. Can be had in Madras from all druggists and provision merchants.

N. B.—See that you get *the* "Kaminia Oil" and nothing just as good

Sole Agents. **The Woollen Mart;**

MANGLORE S. E.

The Most Charming Perfume

OTTO-DILBAHAR. (Regtd)

Sweet, Deliecat, Lasting, Exquisite. Made from the pure extracts of selected natural flowers, without any mixture of alcohol or spirit. Just a few drops on your handkerchief of coat sleeves, give the smell of a real flower garden around you- No matter however powerful the scents others may be using, this.

OTTO DILBAHAR PERFUME

comes up above them all and attractions notice in spite of them. Write for a phial to-day.

Price small bottle Rs. 0 8 0 Price small size Re. 0 12 0

Price large½ oz. bottle Rs. 2 0 0 V. P. annas 4 Extra

Health, Strength, Vigour

Are essential qualities to help out in the struggle for existence. If you are weak, if you lack force and power, if your ambition has sunk to a low ebb

Hark this tidings!

which point the way to health and manliness.

PROF. JAMES'

Electro-Tonic Rearls

Begin the first day to stop existing weakness and with mysterious, elctric power instal new feelings of hope, strength and comfort, better appetite, perect digestion, steadier nerves for tired brains, sexual debilifty, impotency and other ills they bring their peral like blessings with soothing electrical tonic effect. The restorative process begins the first day.

Hari Nath Dutt, Asst Accountant, P. W. D., Mullick Lane, Calcutta, writes:-- A few days ago, I had bought two phials of Prof. James' Electro-Tonic Pearls. They have done me an enormous amount of good, with such efficacy that they are a marvellous discovery of the age. Please send two more bottles of it, and oblige.

R. J. Mewend, Traffic Overseer, Madras Harbour Trusts, writes:—I have already tried Prof. James' Eiectoro-Tonic Pearls and find them very efficacious. Please send three bottles more by V. P. P.

Price per 1 bottle of 25 pills Re. 1-4-0, per bottle of 40 pills Rs. 2. V. P. P. extra. To be had of:—

The Woollen Mart; MANGALORE

The Female Education.

பெண் கல்வி.

இது இரு சித்ர ஸஹிதமான மாதப் பத்திரிகை. ஈமது தமிழ் நாட்டு ஸ்திரீகளுக்காகவே இப்பத்திரிகை போடப்பட்டு வருகிறது. ப்ரதி குடும்பத்திலும் ஒரு பத்திரிகை அவசியமிருக்கவேண்டியது. இதற்கு ப்ராபல்லியமான ஸ்திரீகளும் புருஷர்களும் வ்யாஸம் எழுது கிறார்கள். இதற்கு முன் இப்பத்திரிகையைப் பார்க்கவில்லையானல் ஒரு அணு லேபில் அனுப்புங்கள்

மானேஜர்
'பெண்கல்வி' ஆபீஸ், சென்னை ஈ.

வைத்திய கலாநிதி.

சிறந்த தமிழ் வைத்தியப்பத்திரிகை.
பத்திராதிபர்.

வைத்திய சாஸ்திர ஸம்பந்தமான டிப்ளோமா என்னும் அதி காரப் பத்திரம் பெற்றவரும் S. K. P. D. ஆஸ்பத்திரியில் டாக்டரும், சென்னை ஆயுர்வேத காலேஜில் பிரோபஸரும், ஔஷதயோக விதி, காதம்பரீ, மேகஸந்தேசம் முதலிய நூல்கள் இயற்றியவருமான,

ஆயுர்வேத பூஷண, பண்டித எம். துரைசுவாமி ஐயங்கார் அவர்கள்.

ஆயுர்வேதம் யூனனிவைத்தியம், இங்கிலீஷ் ஹோமியோபதிக் வைத்தியம் முதலியவற்றைப் பற்றிய ஆராய்ச்சிகளும், நிபுணரான ஆயுர்வேத யூனனி இங்கிலீஷ் வைத்தியர்களால் எழுதப்படும் வியாஸங்களும் இதில் வெளியாகும். உயர்ந்த காகிதத்தில 40 பக்கங்களுக்குக் குறையாமல் அழகாய் அச்சிடப்படும். ஒவ்வொரு ஸஞ்சிகையிலும். 5-வது 6-வது பாரங்களில் சிறந்த வைத்திய புஸ்தகம் அச்சிடப்படும். இப்பொழுது சார்ங்கதர சம்ஹிதை, சுச்ருத சம்ஹிதை என்கிற இரண்டு சம்ஸ்கிருத வைத்திய நூல்கள் தமிழில் நன்றாக மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. இப்பத்திரிகை பல விதத்திலும் வைத்தியர்களுக்கும் பொதுஜனங்களுக்கும் இலாபகரமாயிருக்கும். பிரமாதீச வருஷம் ஆவணிமாதம் (செப்டம்பர் 1913) முதலாக வெளியிடப்பட்டு வருகிறது. இது ஒன்று தான் தமிழ

ருக்குத் தகுந்த வைத்திய பத்திரிகை. இப்பத்திரிகையோடு ஒரு வருஷத்தில் வெளியாகும் "சாரங்கதர ஸம்ஹிதை" அல்லது ஸுச்ருத ஸம்ஹிதையின் 160 பக்கங்கள் கொண்ட பாகம் தனிப்பட 1ரூபாய் விலையுள்ளதாகும். இப்பொழுது சந்தா தாரர்களுக்கு மாத்திரம் அப்புத்தகங்கள் இனமாக கிடைப்பது கவனிக்கத்தக்கது.

இந்தியா, பர்மா இவ்விடங்களுக்கு வருஷ சந்தா ரூ 3—12—0. வெளிநாடுகளுக்கு ரூ 5. தபாற்செலவு கிடையாது. தனிப் பிரதி அணா 6.

"வைத்தியகலாநிதி ஆபீசு."

1 வெங்கையர் தெரு மதராஸ். இ.

ஸ்ரீ சுப்பிரமணிய சிவம் இயற்றிய நூல்கள்:

1. சச்சிதானந்தசிவம்:— வேதாந்தத்தின் உட்கருத்துக்களைப் பற்றிக் குரு சிஷ்ய சம்பாஷணையாக ஆசிரியர் சிறைவாஸத்தில்இருந்த பொழுது இயற்றிய நூல். இனிய நடை வாய்ந்தது. விலை அணா 12.

2. ஞானரத்னம் :—வேதாந்த ஞானத்தைப் பற்றிச் சில சிந்தனைக் கட்டுரைகள் அடங்கிய நூல். சிறைவாசத்தில் இருந்தபொழுது ஆசிரியர் பெற்றிருந்த மனோ அமைதியையும் இதுதெரிவிக்கும். விலை அணா 4.

3. பகவத்கீதாசங்கிரகம்: — பகவத்கீதை யென்னும் அரிய நூலின் ரத்னச்சுருக்கம். தெளிவான தமிழில் எழுதப்பட்டுள்ளது இரண்டாம் பதிப்பு விலை அணா 2.

இம்மூன்று புத்தகங்களும் ஒரு ரூபாவுக்குக் கொடுக்கப்படும். வி. பி. தபாற் செலவு வேறு.

4. நளினசுந்தரி அல்லது நாகரிகதடபுடல் :— ஒரு புதிய நவீனகம். தற்கால மேல்நாட்டு நாகரிகத்தில் மயக்குண்டு வாழ்ந்து வந்த புருஷனும் மனைவியும் நாகரிகத் தீங்குகளினின்றும் தப்பித்து மகான் ஒருவருடைய ஞானோபதேசத்தால் ஆரிய தர்மானுஷ்டானங்களைக் கைக்கொண்டு சுகமாக வாழ்கின்றனரென்பது கதையின் சுருக்கம். தற்கால நாகரிகத்தின் உண்மையான ஸ்திதி இத்தகைய என்பதையும் அதைப் பின்பற்றுவதாலுண்டாகும் தீங்குகளையும் இந் 'நாவல்' மிகத்தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

விலை அணா 8. தபாற் கூலி வேறு.

காரியஸ்தர் "ஞானபாநு" ஆபீஸ்

மைலாப்பூர், சென்னை.

"INDIAN ADVERTISER"

இந்திய விளம்பரக்காரன்.

இச்சஞ்சிகை பிரதி ஆங்கில மாதமும், இங்கிலீஷ் தமிழ் பிரஞ்சு இம்மூன்று பாஷைகளிலும் வேதாந்தம், கல்வி, விவசாயம் வியாபாரம், மதவிஷயம், இராஜாங்க ஜனாங்கசீர்திருத்தங்கள், இராஜபக்தி நன்மார்க்க நாவல்கள், உலகஅற்புதங்கள், வர்த்தமானங்கள் முதலான விஷயங்களுடன் வெளியாகிறது.

சந்தா

இந்நாட்டுக்கு வருஷத்திற்கு	1	0	0
வெளிநாட்டிற்கு வருஷத்திற்கு	2	0	0

விளம்பரம் செய்ய முதன்மையானது. மற்று விஷயங்களுக்கு நேரில் எழுதித்தெரிந்துக் கொள்ளவும்.

மானேஜர்

இந்தியன் அட்வர்டைஸர்

புதுவை.

இனாம் இனாம் இனாம்

180 பகக்ப் புத்தகம் இனாம்.

இப்புத்தகம் ஒருவர் தாம் அறியவேண்டிய ஆரோக்கிய சம்பந்தமான ஜீவாதாரங்களைத் தெரிவிக்கிறது. வாலிபர்களுக்கும் இல்லறத்திருப்போருக்கும் உபயோகமுள்ளது. விலாசத்தைத் தெரிவிப்போர்களுக்கு இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

வைத்திய சாஸ்திரி,

மணிசங்கர் கோவிந்தஜி.

ஆதகங்க நிக்ரஹ ஔஷதாலயம்.

பிராட்வே, மதராஸ்.

அனேக தங்கமெடல்களும் வெள்ளிமெடல்களும்
பெற்ற டாக்ற்றா H. L. பட்லிவாலாவின்,
உலகப்பிரசித்தமான மருந்துகள்.

Ague mixture or Pills:—மலேசுரம், குளிர் சுரம் முதலிய எவ்வகை சுரங்களுக்கும் கைகண்டமருந்து விலே ரூ க.

Haretone:—நரைமயிர் கறுக்க திவ்யமான மருந்து விலே ரூ ங.

Toinc Pills:—நரம்புத்தளாச்சி, பலக்ஷயம் முதலியவற்றை நீக்கி ஆச்சரியப்படத்தக்க தேகபலத்தை உண்டு பண்ணும். குளிகைகள். விலே ரூபா கஇ.

Tooth Powder:—பற்பொடி. நாட்டு மூலிகைகளாலும் இங்கிலீஷ் மருந்துகளாலும் செய்யப்பட்டது. வாய்நாற்றம் பற்புழு பற்கட்டு முதலியவைகளைத் திட்டமாய்க் கண்டிக்கும் விலே அணா ச.
பெரிய பொட்டணம் அணா அ.

Ring worm Ointment:—புழு வெட்டுக்கு மகத்தான மருந்து ஒரே நாளையில் சொஸ்தப்படுத்தும். விலே அணா ச.

வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்துக்கு இங்கிலீஷில் எழுதி வி. பி. மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

Dr. H. L. Batliwalla's co,
Warli Labaratory, Dadar. Bombay.

ஏஜண்டுகள் தேவை.

இது ஒரு நல்ல சமயம்.

நமது பத்திரிகைக்குச் சந்தாதாரைச் சேர்க்க ஏஜண்டுகள் தேவை. தகுதியுடையவர்களுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

பத்திராதிபர்.

குடியர்கள்

எங்கள் "லிக்கோரினே" எந்தப் பானத்திலும் கலந்து குடிகாரருக்கும் அபின் தின்போருக்கும் கொடுப்பதில் குடியையும் அபினேயும் ஆயுளுள்ளளவும் விட்டுவிடுகிறார்கள். பரீட்சிக்கும் பலருக்கும் உத்தரவாதம். ஏராளமான நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றது. பத்தியமே கிடையாது. 25 30 வருடக் குடியா ஒரே புட்டியில் குணப்படுகிறார்கள். 40 நாள் லிக்கோரின் புட்டி விலை ரு 1-8. பார்க்கிங் வி. பி. முதலியவை அணா 5. பிரத்தியேகம்.

ஜே. எப். டீ. டேவிட்

கோட்டை, சேலம்

சித்திரப் படங்களுடன்கூடிய

மானிட ஜீவிய சிந்தாமணி.

இப்புத்தகம் அமேரிக்கா கண்டத்திலுள்ள அனேக அரிய பெரிய சாஸ்திரங்களையும் நமது பூர்வீக கிரந்தங்களையும் ஆராய்ச்சி செய்து எழுதப் பெற்றுள்ளது. இதில் தேகத்திலுள்ள எலும்பு, சதை, நாடி, நரம்பு முதலியவைகளைப் பற்றியும் தேகத்திலுள்ள ஈரல், இரப்பை, சுவாசப்பை, சிறுகுடல், பெருங்குடல், மூளை முதலிய சரீர அமைப்பை சித்திரப் படங்களுடன் எடுத்துக்காட்டியும், தேகத்திலுள்ள ஒவ்வொரு. உறுப்புகளும் செய்யு வேலை முறைப்பாடும், அப்படி செய்யத் தவறின் அதற்குக் காரணகும்ஸ்திரீ புருஷர்களுக்குஉண்டாகும் ஒவ்வொரு ரோகங்களும் எந்தெந்த ஸ்தானங்களிலிருந்து எவ்வெவ்விதமாய் உண்டாகின்றன வென்பதையும் அந்நோய்களுக்குப்பரிகாரமான இந்து, யூனானி, இங்கிலீஷ் முதலிய ஔஷதபாகங்களும், மருத்துவசாஸ்திரம், சுகாதாரம், சிசுபரிபாலனம்பால்ய விவாகம், ஆண் பெண் சிசு உற்பத்தி விவரம், ஆண்மலடு, பெண்மலடு முதலிய விவரங்களும், பாம்பு, பல்லி, நட்டுவக்காலி, வண்டுகடி முதலிய விஷயங்களும் அவ்வவற்றிற்கான ஔடத விபரங்களும் இன்னும் இவ்விடத்திற் சொல்லமுடியாத அனேக இரகஸ்யமான விஷயங்களுடனும் கூடியது. இப்புத்தகத்தைக் கைகொண் ஸ்திரீபுருடர்கள் வைத்தியனைத் தேடவேண்டியதில்லை. இதன் விலை ரூ 1-8-0 காலிகோ பயிண்டு 1-12-0 தபால் சார்ச் அணா 3. கம்பனும் கலைமகளும் இது ஓர் இனிய செந்தமிழ் சரித்திரம் 2-ம் பதிப்பு விலை அணா 4.

டாக்டர் சந்திரசேகரர்

கும்பகோணம்.

பி. சுப்பராய், ஆயுர்வேத

ஔஷிதசாலை,

ஸ்ரீ வெங்கடேசபெருமாள் கோவில் சன்னதி. தஞ்சாவூர்.

---

20. சஞ்சீவி மாத்திரைகள்:—இம்மாத்திரைகளினால் தலைவலி, தலைபாரம், சளி, இருமல், சுரம், மயக்கம், வாந்தி விஷசுரம் இசிவு, வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, தெற்குத்திக்கணை முதலிய நோய்கள் தீரும். அரைக்குழந்தைகள் முதல் யாவரும் உபயோகிக்கலாம். விலை சீசா 1-க்கு அணா 10. இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய சிலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

21. கோரோஜனை மாத்திரைகள்:—இம்மாத்திரையினாலிருமல் சளி, சுரம், வயிற்றுப்பிசம், ஜலதோஷம், இளைப்பு, வலி, மயக்கம், தெற்குத்திக்கணை, ஜன்னி, வயிற்றுப்போக்கு, தோஷம், முக்குமாந்தம், ஊதுகணம், செவ்வாப்பு, கடுவான், கரப்பான், பால்மாந்தம் முதலிய எல்லா மாந்தங்களுட், கருங்கிரந்தி, செங்கிரந்தி, மலஜலக்கட்டு, முதலியதுகளும், மலைசுரம்' முறைசுரம், முதலான பலவித சுரங்களும் அடியோடு நீங்கும். சீசா 1-க்கு விலை அணா 10. 1 முதல் 6 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்,

22. கரப்பானுக்கும் சொரி சிரங்குக்கும் மருந்து:—இம்மருந்தை டைரக்ஷனில் சொல்லியபடி மேலுக்குமட்டும் உபயோகித்து வந்தால் வெகு சீக்கிரத்தில் எவ்வித நமைச்சல்களும், சொரி, சிரங்கு, வரட்டுச்சொரி, அநேக குழந்தைகளுக்கு தேகமெங்கும் அல்லது சில பாகங்களில் கண்டு அதிக நமைச்சலும், தொந்திரவையும் தருகின்ற எவ்வித கருப்பான்களையும் வெகு சீக்கிரத்தில் ஆற்றிவிடும். விலை சீசா 1-க்கு அணா 8. இந்தியாவிலும் பர்மாவிலும் அனுப்ப வி. பி. சிலவு 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

23. கேசஸஞ்சீவாசனி:—உசிதமான வாசனை சாமான்கள் சேர்த்து செய்யப்பட்ட இத்தைலத்தால் கூந்தல் செழிப்பாகவும், நெருக்கமாகவும், கருப்பாகவும் வளரும், கண்கள் குளிரும், தலைநோய் போகும், மூளையைப் பலப்படுத்தும், மிகவும் வாசனையுள்ள தைலம். சீசா 1-க்கு ரூபா 1. வி. பி. சிலவு 1 அல்லது 2 சீசாக்கள்வல் ரையில் அணா 5 பிரத்தியேகம்.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

திருப்தி இல்லாதவைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

பட்டுபீதாம்பர லிஸ்டுகளுக்கு இனமாக அனுப்பப் படும்.

உருத்திராக்ஷங்கள் ஜபமாலைகள்!!

பரிசுத்தமானது.

108உள்ள மாலை 1க்கு 6 அணாமுதல் ரூ 12 வரை, விலை அதிகப்படுவது போல் மணிகள் சிறிதாகவிருக்கும் 6 முகக்கண்டிகள் 33 உள்ள கண்டி 1-க்கு ரூ 1 முதல் 10 வரை 5 முகக்கண்டி 32 உள்ளது கண்டி 1-க்கு அ 10 முதல் ரூபா 10 வரை விலை அதிகப்படுவது போல் மணிகள் பெரிதாக இருக்கும்.

பனி! பனி!! பனி!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உறுதியும், நைசும், நேர்த்தியுமான கம்பளி போர்வைகள், 6 முழம் நீளம் 3 முழம் அகலம், சிகப்பு முதலிய சகல நிறத்திலும் தயாராகவிருக்கின்றன, உருப்படி 1-க்கு ரூபா 5 8 0, ஷை சிறியது 1-க்கு 4 8 0, மேகவர்ண போர்வை 1-க்கு 6 8 0 தபால் செலவு பிரத்தியேகம்.

காசி வைரவர் கயிறு.

க-வது	நெம்பர்	ா-க்கு	3 0 0
உ-வது	,,	,,	2 8 0
ங-வது	,,	,,	2 0 0
ச-வது	,,	,,	0 6 0

வெண்பட்டு வேஷ்டிகள்

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் கோயமுத்தூர் வேஷ்டிகள் மாதிரி சன்னக்கம்பி, ருத்திராக்ஷக்கம்பி, ஜரிகைக் கம்பிபோட்டவை.

முழம்	அகல	ரூ முதல்		வரை
4	2	$4\frac{1}{2}$	,,	7
6	$2\frac{1}{2}$	7	,,	9
6	3	10	,,	12
7	$2\frac{1}{2}$	8	,,	12
7	3	10	,,	14
8	3	12	,,	15
9	3	14	,,	20
10	3	15	,,	22

குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக் கூடிய பித்தளைவெங்கலத்தாற் செய்தசெப்பு, குடம், கர்ண்டிமுதல் 32 சாமான்களடங்கிய அழகும், நேர்த்தியும், நைசும், பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள

சிறு செட்டு 1-க்கு ரூபா 2

பெரியசெட்டு 1க்கு ரூபா 4

நல்ல பெருங்காயம் தோலா 10க்கு ரூ 1 0 0 உடனே எழுதுங்கள்.

விலாசம் மானேஜர்

பட்டுபீதாம்பர கம்பெனி,

தாராநகர் தெரு, காசி.

Silk Pitaber Co., Benares City.